விலை சதம் 5

இரண்டாம் பதிப்பு

பக்கங்கள் 4

சுதந்திரன்

THE "SUTANTIRAN."

(A TAMIL DAILY OF THE TAMIL SPEAKING PEOPLE.)

REGISTERED AS A NEWSPAPER AT THE G. P. O.

இலங்கையினதும் இலங்கைவாழ் தமிழ்ப் பேசும் மக்களதும் சுதந்திரத்திற்காக வெளிவருவது.

"சுதந்திரன்"
விளம்பர விபரங்கள்

சுதந்திரனில் ஒப்பந்தத்தின் பேரில் விளம்பரம் செய்ய விரும்புகிறவர்களும், அவசரகால அறிவித்தல்களுக்கு விரும்புகிறவர்களும் எழுதுங்கள்.

மானேஜர்,
"சுதந்திரன்"
194 A. தட்டாரத் தெரு, கொழும்பு.

Telegrams: 'SUTANTIRAN' COLOMBO

ஒன்றுபட்டால் உண்டு வாழ்வு

"சுதந்திரன்"
(தனிப் பதிப்பு)
சந்தா விபரம்

தனிப் பிரதி		ரூ	
3	மாதச் சந்தா	ரூ	6-00
6	மாதச் சந்தா	"	12-00
1	வருடச் சந்தா	"	24-00

மானேஜர்,
"சுதந்திரன்"
194 A, தட்டாரத் தெரு, கொழும்பு.

Phone: 3411

நாமார்க்கும் குடியல்லோம்

புத்தகம் 1 | கொழும்பு, சர்வஜித்து ஆடு புரட்டாசி மீ 30உ வியாழக்கிழமை | Colombo, October, 16 1947 | ஹிஜிரி 1366 துல்கஃதா பிறை 30 | இதழ் 135

ரஷியா மீது அணுகுண்டு போடவேண்டும்

மூன்றாவது யுத்தத்திற்கு பைர்னஸ் தூண்டுகோல்

அமெரிக்காவின் மாஜி அந்நிய நாட்டு மந்திரி வெளியிட்டுள்ள புத்தகம்

அடுத்த உலக யுத்தத்தில் பிரிட்டனும் பிரிட்டிஷ் சாம்ராஜ்ய நாடுகளும் அமெரிக்காவுடன் சேரும்

அமெரிக்காவில் சர்ச்சில் பிரசங்கம், கிராமபோன் ரிக்கார்டு மூலம் பிரசாரம் செய்யப்படுகிறது

நியூயார்க், அக் 14

இன்று ஹார்ப்பர் பிரதர்ஸ் அமெரிக்காவின் மாஜி அந்நிய நாட்டு மந்திரி திரு ஜேம்ஸ் எப். பைர்னஸ் எழுதிய புத்தகத்தைப் பிரசுரம் செய்திருக்கிறார்கள். அதில் அவர் பின்வருமாறு தெரிவிக்கிறார்:-

அணுகுண்டு சக்தியின் உலகக் கட்டுப்பாடு சம்பந்தமாகவும் ஜெர்மனியின் சமாதான உடன்படிக்கை சம்பந்தமாகவும் ரஷியா முட்டுக்கட்டை போட்டு வருகிறது. ரஷியாவுக்கு அமெரிக்கா வெறும் வாய்ப் பேச்சில் பதிலளித்துக் கொண்டிருப்பதால் பயனில்லை. அணுக்குண்டை பிரயோகித்துப் பயன் கொடுப்பதுதான் சிறந்த வழி

"பட்டவர்த்தனமான பேச்சு" என்ற தலைப்பில் பிரசுரமான இப்புத்தகத்தில் திரு. பைர்னஸ் தான் அந்நிய நாட்டு மந்திரியாக இருந்தபோது நடந்த சம்பவங்களையும் அவைகள் சம்பந்தமாக அவர் ரஷியா மீது எடுத்துக் கொண்ட கடுமையான நடவடிக்கைகளையும் பற்றி தெரிவித்திருக்கிறார்.

சோவியத் அந்நியநாட்டு மந்திரியுடன் பேசிய இரகசிய பேச்சுகளையும் தெரிவித்திருக்கிறார். ரஷியாவின் சம்மதமின்றியே ஜெர்மனி, ஆஸ்திரியா, ஜப்பான் ஆகிய நாடுகளுடன் அமெரிக்கா சமாதான உடன்படிகை செய்ய வேண்டிய நிர்ப்பந்தமான நிலைமை ஏற்படுமென்றும், இது சம்பந்தமாக அமெரிக்கா தன்னிச்சையான நடவடிக்கை எடுக்குக் கொள்ள வேண்டுமென்றும் ரஷியா ஒத்துழைக்க முன்வராவிடில் மூன்றாவது உலக யுத்தம் தவிர்க்க முடியாததொன்றாகுமென்றும் அவர் கூறுகிறார்.

சர்ச்சில் முரசு

யுத்த காலத்தில் பிரிட்டிஷ் பிரதம மந்திரியாக இருந்த திரு. வின்ஸடன் சர்ச்சில் பேசிய பேச்சு கிராமபோன் ரிக்கார்டில் பதிவு செய்யப்பட்டு அந்த ரிக்கார்டுகள் இன்று நியூயார்க் நகரில் நடைபெற்ற ஒரு விருந்துக் கூட்டத்தில் வைக்கப்பட்டு ஒலிபரப்பப்பட்டது. அதில் அவர் பேசியிருப்பதாவது:-

அடுத்த யுத்தம் ஏற்படக் கூடிய அபாயகரமான நிலைமை இருந்து வருகிறது. சோவியத் ரஷியாவும் அதனுடன் தோழமை பூண்டுள்ள ஏனைய கம்யூனிஸ்டு நாடுகளும் உலக நாகரீகத்திற்கு விரோதமாக உலகெங்கும் செய்து வரும் பிரசாரம் இந்த அபாயத்தின் அறிகுறியாகும். இந்த சந்தர்ப்பத்தில் பிரிட்டனும் பிரிட்டிஷ் சாம்ராஜ்ய நாடுகளும் எவ்விதமான ஆக்கிரமிப்பு முறைகளைக் கைகொண்டிருந்த போதிலும் உலக யுத்தம் நேரிடுமாயின் அவைகள் முந்திய யுத்தத்தில் ஜெர்மனி, ஜப்பான், இத்தாலி ஆகிய நாடுகளுக்கு விரோதமாக அமெரிக்காவுடன் சேர்ந்து யுத்தம் புரிந்து வெற்றி பெற்றதுபோல இந்த யுத்தத்திலும் அமெரிக்காவுடன் சேர முன் வருமென்பதற்கு ஐயமில்லை. சோவியத்சர்க்கார் இப்பொழுது ஏன் இவ்வித பலாத்கார ஆக்கிரமிப்புக் கொள்கையை அனுஷ்டித்து வருகிறதென்பது எனக்குப் புரியவில்லை. யுத்தத்தைக் கிளப்புவதற்காக அது இப்படி செய்து வருகிறதென்று என்னால் நம்ப முடியாது. கிரெம்லினிலிருந்து வரும் ஏராளமான ஜனங்கள் மீதும் பிரதேசங்கள் மீதும் சாவாகிகார எஜமானத்துவ ஆட்சி செலுத்தி வரும் இந்த 14 பேர் வழிகள் சகல விஷயங்களையும் நன்கு அறிந்து கொள்ளும் சக்தி படைத்தவர்களாக இருக்கிறார்கள். அவர்கள் யுத்தகளத்தில் இறங்க வேண்டுமென்று நினைத்தார்களேயாகில் இதர ஜன நாயக நாடுகள் தங்களைப் பாதுகாத்துக்கொள்ள துள்ளியெழும் என்பது நிச்சயம்.

நிரந்தரக் கமிட்டி

நியூயார்க், அக் 14

ஐக்கிய தேச அரசியல் கமிட்டி இன்று கூடியது. விசேஷ வாக்கு சம்பந்தமாக 57 ஐக்கிய தேசங்களுமடங்கிய நிரந்தர கமிட்டி அமைப்பதான அமெரிக்காவின் தீர்மானம் விவாதிக்கப்பட்டது.

இத்தீர்மானத்தை சிலர் பின்னமாக்க ரஷியப் பிரதிநிதி பகடியாகவும் ஆக்கிரமத்துடன் தாக்கியும் பேசினார். அமெரிக்காவையும் தாக்கிப் பேசினார். அமெரிக்கப் பிரதிநிதி நிரந்தரக் கமிட்டியின் அவசியத்தைக் குறித்துப் பேசினார். ஆஸ்திரேலியப் பிரதிநிதி ரஷியாவின் குற்றச்சாட்டு ஆதாரமற்றதென்றும் ஆனால் நிரந்தரக் கமிட்டியால் ஐசெமபிளியின் அதிகாரம் பங்கமுறாது பார்த்துக் கொள்ள வேண்டுமென்றும் தெரிவித்தார்.

சென்ட் சபை அங்கத்தினர்கள் தேர்தல்

பிரதிநிதிகள் சபை இன்று 15 அங்கத்தினரைத் தெரிந்தெடுக்கும்

பிரதம மந்திரி அளித்த தேநீர் விருந்தை எதிர்க் கட்சிகள் பகிஷ்கரித்தன

கொழும்பு, அக். 16

நேற்று பிரதிநிதிகள் சபை, குறிப்பிடப்பட்டிருந்த நேரத்திற்கு 15 நிமிட நேரம் பிந்தி 10-45 மணிக்குக் கூடியது. சபைக்கு திரு. ஏ. எப். மொலமுரே தலைமை வகித்தார். செனட் சபைக்கு பிரதிநிதிகள் சபை 15 அங்கத்தவர்களைத் தேர்ந்தெடுப்பது சம்பந்தமான ஆரம்ப நடவடிக்கைகள் நடைபெற்றன.

பிரதிநிதிகள் சபை லிகிதர் திரு. பி. டெரனியகல தேர்தல் அதிகாரியாக அபேட்சகர்களின் நியமனச் சீட்டுகளை மறைவாக இருந்து வாங்கினார். 30 அபேட்சகர்களின் நியமனச் சீட்டுகள் பெற்றுக்கொள்ளப்பட்டன.

இன்றைய கூட்டத்தில் ரகசியமாக வோட்டுகள் பதிவு செய்யப்பட்டு முடிவுகள் தெரிவிக்கப்படும்.

ஸ்பீக்கர் திரு. மொலமுரே சபையில் 30 அபேட்சகர்களின் பெயர்களை வாசித்தார். அத்துடன் கூட்டம் இன்று காலை 10 மணிக்கு ஒத்திவைக்கப்பட்டது.

30 அபேட்சகர்களின் பெயர்கள் பின்வருமாறு:- திருவாளர்கள் சிரில் டி. சொய்சா, பெரிய சுந்தரம், எச். டபிள்யூ. ரம்புக்வல்ல, ஏ. பி. ஜெயசேனா, ஏ. ஆர். ஏ. ராஸிக், ஆர் எஸ். தென்னக்கூன், ஜஸ்டின் கொத்தலாவல, எல். பி. டிமெல், டபிள்யூ. கே. ஜினதாச, ஆர். சிவகுருநாதர், எஸ். நடேசன், எப். ஏ. கபூர், சி. விஜயசிங்க, ஆர். எப். எஸ். டிமெல், டபிள்யூ. ஏ. பி. சொய்சா, எச். எம். ஒய். இஸமாயில், டி. டபிள்யூ. ஜே பெரேரா, ஜே தியாகராஜா, எஸ். எல். வி தர்மகீர்த்தி, டி. ஜேம்ஸ சேனவிரத்ன, பார்ன்ஸ் ரத்வத்த, சி. டபிள்யூ. டபிள்யூ. கன்னங்கரா, எம். ஏ. எல். காரியப்பர், எஸ். டி. எஸ். ஜெயசிங்க, சி வி. ரணவக்க, டி. டி. எம். குணரத்ன, சி. டபிள்யு. கனகசபை, டாக்டர். இ. எம். வி. நாகநாதன், டாக்டர். எம். ஜி. பெரேரா, ஸ்ரீமதி. ஏ.எப்.மொலமுரே.

இவர்களில் இன்று நடைபெறும் ரகசிய வாக்கு மூலம் 15 பேர்கள் செனட் சபைக்குத் தெரிந்தெடுக்கப்படுவார்கள். இந்த 15 பேர்களின் பெயர்களும் கவர்னருக்கு சமர்ப்பிக்கப்படும். கவர்னர் மற்றும் 15 பேர்களை நியமனஞ் செய்வார். அத்துடன் 30 பேர்களடங்கிய செனட் சபை ஏற்படுத்தப்படும்.

பிரதமர் தேநீர் விருந்து பகிஷ்காரம்

நேற்றைக்கு முன் தினம் பிரதிநிதிகள் சபையின் முதல் கூட்டம் முடிந்ததும் பிரதம மந்திரி திரு. சேனநாயக்கா அளித்த தேநீர் விருந்துக் கூட்டத்தை எதிர்க் கட்சிகளைச் சேர்ந்தவர்கள் பகிஷ்கரித்தார்கள். பிரதம மந்திரி உத்தியோக தோரணையில் விருந்து நடத்தியதாலும், அது பகிஷ்கரிக்கப்பட்டதென்றும், விருந்துக்கு அழைப்புகள் அனுப்பியபோது, விருந்தினர் தங்கள் வருகையைத் தெரிவித்து பிரதிநிதிகள் சபை லிகிதருக்குப் பதில் அனுப்பும்படி குறிப்பிட்டது தவறான முறையென்று எதிர்க் கட்சிகளைச் சேர்ந்தவர்கள் அபிப்பிராயம் தெரிவிக்கிறார்கள்.

கமிட்டிகளின் டெபுட்டி சேர்மன்

நேற்றைக்கு முன் தினம் நடைபெற்ற கூட்டத்தில் நியமன அங்கத்தினரான திரு. ஜே. ஏ மார்ட்டினஸ் கமிட்டிகளின் டெபுடி சேர்மனாகத் தெரிந்தெடுக்கப்பட்டார்.

இலங்கை பிரதமர் இந்திய பிரதமர் சந்திப்பு

டிசம்பர் முதல் வாரம் நடைபெறும்

அக்டோபர் 23-ல் திரு. கிரி டில்லி விஜயம்

புதுடில்லி, அக். 14

இந்தியா இலங்கை பிரச்னைகளை சுமுகமாகதீர்ப்பதுசம்பந்தமாகஇங்கு,கூடியசீக்கிரம்பேச்சுவார்த்தைகள் ஆரம்பமாகுமென யுனைட்டட் பிரஸ் அறிகிறது.

இலங்கைப் பிரதமர் திரு சேனநாயகா டிசம்பர் மாத ஆரம்பத்தில் பண்டித நேருவை சந்திக்க டில்லி வருவாரென்று எதிர்பார்க்கப்படுகிறது. இலங்கையில் இந்தியப் பிரதிநிதியாக உள்ள ஸ்ரீ வி. வி. கிரி அக். 23-ம் தேதியன்று இங்குவந்து பண்டித நேருவுடன் இது சம்பந்தமாக கலந்தாலோசிப்பார்.

இரு சர்க்கார்களுக்குமிடையே பூரணமான பேச்சுவார்த்தைகள் நடத்துவதற்கு இதை பூர்வாங்கமானதாக கருதப்படலாம்.

அக்டோபர் 27-ம் தேதி இங்கு ஆரம்பமாகும் ஆசிய பிரதேச தொழில் மகாநாட்டில் திரு. கிரி கலந்துகொள்வார்.

பிரதமர் மீது 'சுயேச்சை'கள் பிரேரணை

[நமது பிரதிநிதிகள் சபை நிருபர்]

பாராளுமன்றப் பிரதிநிதிகள் சபையில் நேற்று ஸ்பீக்கர், 'செனட்''சபை அங்கத்தவர்கள் தெரிவுக்கு பிரேரிக்கப்பட்டு அனுவதிக்கப் பட்டவர்களின் நாமாவளியை வாசித்த பொழுது பார்வையாளர் இடக்கும் கலரியில் அரைவாசிகாலியாயிருந்தது.

அந்த ஜாபிதாவே வெகு வினோதமானது, அதிலும்குறிப்பாக யூ. என். பிக் கட்சியினரால் நிறுத்தப்பட்டிருப்பவர்களின் பெயர்களைக் கவனிக்கும் பொழுது மிகவும் வேடிக்கையாக விருக்கின்றது.

பொதுத் தேர்தலில் தோல்வியுற்றவர்களைத் தேசத்தின் மீது யூ. என் பிக் கட்சியினர் சுமத்த மாட்டார்கள் என ஒவ்வொருவரும் எதிர்பார்த்திருந்தனர். யூ என். பியினர் சரியானதைத் தான் செய்வார்கள் என்று ஒருவர் எண்ணக்கூடும். ஆனால் அப்படி அவர்கள் செய்யாது விட்டது எவருக்கும் ஆச்சரியத்தைக் கொடுக்கதாராது என்பது மட்டும் உண்மை. தேர்தலில் தோல்வியுற்ற இருவாளர்கள் ஜகன்னாதன் தியாகராஜா, ஏ ஆர் ஏ ராசிக், டபிள்யூ, ஏ பி சொய்ஸா முதலியவர்களின் நியமனங்கள் ஒரு கேவலமான முன்மாதிரியை ஏற்படுத்துவதாயிருக்கின்றது. திரு. டபிள்யூ ஏ பீ. சொய்ஸா தேர்தலில் தமது கடடுப் பணத்தையும் இழந்தவராவர் என்பது குறிப்பிடதக்கதாகும். திரு சொய்ஸாவை செனடுக்குத் தெரிவு செய்வதால் பெரும் அபாயம் ஒன்றுமநேர்ந்துவிடாது; ஆயின் அவரது பெயரை பிரேரித்து அனுவதித்தவர்கள் பொறுப்பற்ற முறையில் தான் நடந்து கொண்டார்கள்.

இலங்கையில் இப்பொழுது, பொதுஜன சீவியத்தில் மிகுந்த முக்கியத்துவம் வகிக்கும் பெரியராகிய "பஸ் பிரபுவுக்கு" பழைய சேனநாயக்கா அரசாங்கம் எடுபொழுதும் பாரபட்சம் காட்டிவந்தது. அந்தப பாரபட்சத்தைத் தொடர்ந்து வைத்திருப்பதற்காகவே ஒரு பிரபலம் வாய்ந்த பஸ் முதலாளி செனட் நியமனத்திற்காக குறிப்பிடப்பட்டிருக்கலாம் என்று எண்ண வேண்டியிருக்கிறது- இது ஓர் வெளிப்படையான யூ. என். பி தந்திரம்தான்.

என்ன காரணத்திற்காக ஸ்ரீமதி மொலமுரேக்கு செனட் நியமனம் எப்பது ஒரு விசேஷித்த அம்சம் ஒருவேளை லங்கா சமசமாஜியக் கட்சியினர் ஒருபெண்ணை பிரதிநிதிகள் சபைக்குத் தெரிவு செய்ததடியால், யூ என். பிக் கட்சியினர் தாங்களும் ஒரு பெண்ணைக் கட்சி செனடிலாகுதல் வைத்திருக்க வேண்டுமென்று நினைக்கலாம்போலும். ஸ்ரீமதி மொலமுரே, திரு. ஜஸ்டின் கொத்தலாவல முதலியவர்களின் தெரிவு பிரதம மந்திரியின் கபினட் அமைக்கும் முறையிலுள்ள "குடும்பக்கட்சி" அமைப்பதற்குப் பொருத்தமானதாகும்.

பதினைந்து ஸ்தானங்களுக்கு முப்பது அபேட்சகர்கள் இருப்பதால், செனட்சபை தேர்தல் முடிவை இலகுவில் சொல்லிவிட முடியாது. ஆனால் "சுயேச்சைகள்" என்று பட்டை நாமஞ் சூட்டி உள்ளவர்களின் வாக்குகள் மிகவும் விசேஷமான ஸ்தானத்தை வகிக்கும் என்பது மட்டும் நிச்சயம். இந்த சுயேச்சை வாதுகளை யூ என். பியினருடன் ஆவலோடு தாளமிடுகக தொடங்கிவிட்டார்கள் என்பது வர வர வெளிப்படையாகின்றது.

சுயேச்சை வாதிகள் திரு. எஸ். சிறிநமபலமும், திரு எஸ் சுந்தரலிங்கமும் பதவி ஆசையால், சேனநாயக்கா மந்திரி சபையில் மந்திரிகளாகி விட்டனர். ஆகவே பிரதம மந்திரியின் இராக ஆலாபனத்திற்கு ஆவாகளை இனி நடனமிடவேண்டியவர்களாய்விட்டார்கள் சுயேச்சை வாதுகளில் சில கணணியமுள்ளவர்களைத் தவிர்த்து மற்றவர்கள் யாவரும் பிரதம மந்திரியின் முகத்திலுள்ள அழகைப் பார்த்துச் சொக்கத் தொடங்கிவிட்டார்கள். சென்ற செவ்வாய்க்கிழமை பிரதம மந்திரி, பிரதிநிதிகளுக்கு ஒரு தேனீர் விருந்து கொடுத்தார். இவ்விருந்தை, அரசியல சமபிரதாய முறைப்படி எதிர்ககட்சியினரைக் கலந்தாலோசியாது பிரதம மந்திரி அளிக்க எண்ணியபடியால் எதிர்ககட்சிப் பிரதிநிதிகள் ஒருவரும் பங்குபற்றிக் கொள்ளவில்லை. ஆனால் சுயேச்சைப் பிரதிநிதிகளுள் சிலர் திரு. கே. வி. நடராஜா உடபட அவ்விருந்தில் பங்கு பற்றலாம் என்று நினைத்துக் கொண்டார்கள்.

இந்தமாதிரியான "சுயேச்சை வாதிகள்' உதவியைக் கொண்டு யூ. என். பிக் கட்சியினர் தங்களுக்கு வேண்டிய செனட்டர்களைத் தெரிவு செய்வதில் அவ்வளவு சிரமப்படவேண்டியிருக்காது. தமிழ்க் காங்கிரஸால குறிப்பிடப்பட்ட டாக்டர் இ. எம். வி. நாகநாதன், திரு. ஆர். சிவகுருநாதர் ஆகிய இருவரையும் தெரிவு செய்வதில் சபையில் அவ்வளவு கஷ்டமிருக்காது. அவர்கள் இருவரும் தெரிவு செய்யப்பட்டால் பழைய சேனநாயக்காவின் அரசாங்கத்தினால் ஒருவித கண்காணிப்பு மற்றிருந்த தமிழர்களினதும், மற்றும் ஏழைச் சிறுபான்மையோரதும் நலவன்களைக் கவனிக்க பாதுகாப்பாளர்களாவார்கள் என்பது திண்ணம்.

இன்று செனட்டர்களின் தெரிவு முடிந்ததும், பாராளுமன்றத் திறப்புவிழா வரைக்கும் சபை ஒதுதி வைக்கப்படும். பராளுமன்ற அங்குரார்ப்பண விழாவின் பின்பு சேனநாயக்கா மந்திரிசபையையும் அவர்களுக்கு பக்கபந்தம் பிடிப்பவர்களாகிய சுயேச்சை வாதிகளையும் அவர்கள் புதிதாகப் பெற்ற அதிகாரப் பெருமையுடன் நாம பார்க்கலாம்.

பண்டித நேருவுக்கு பாரசீக பிரதம மந்திரி செய்தி

ஸ்ரீமதி. விஜயலட்சுமிக்கு வியட்நாம் மாதர் சங்கத்தின் வேண்டுகோள்

பரிசுத்த பாப்பரசரை பலான்பூர் நவாப் சந்தித்தார்

புதுடில்லி, அக். 14

இந்தியா சுதந்திரம் அடைந்துள்ளது போல வியட்நாமும் சுதந்திரமடைய உதவி செய்ய வேண்டுமென்று, வியடநாம் மாதர் சங்கததார் சைகோனிலிருந்து நியூயார்க்கிலிருக்கும் ஸ்ரீமதி. விஜயலட்சுமி பண்டிட்டுக்குத் தந்தி யனுப்பியிருக்கிறார்கள்.

பாரசீக பிரதமர் தந்தி

இந்தியாவிலும் பாக்கிஸ்தானிலும் நிகழும் துர்ப்பாக்கியமான சம்பவங்களைக் குறித்து வருத்தப்படுவதாகவும், பண்டித நேரு தனது இராஜதந்திர நிபுணததுவத்தை உபயோகித்து கூடிய சீக்கிரம் அமைதியை நிலைநாட்டுவார் என்று நம்புவதாகவும் பாரசீக பிரதம மந்திரி கவாம், இந்தியா பிரதம மந்திரி பண்டித நேருவுக்குத் தந்திச் செய்தி அனுப்பியிருக்கிறார். இவ்விஷயம டெஹ்ரான் ரேடியோ மூலம் ஒலிபரப்பப்பட்டது.

பலான்பூர் நவாப் பம்பாய் மாகாணத்திலுள்ள பலான்பூர் சமஸ்தானாதிபதியான பலான்பூர் நவாப் இன்று ரோமாபுரியில் பரிசுதத பாப்பரசரைச் சந்தித்தார்.

இந்தியா பத்திராதிபர்கள் அறிக்கை

பம்பாய், அக். 14

அகில இந்திய பத்திராதிபர்கள் மகாநாடடுக் காரியதரிசி திரு. கே. சீனிவாசன் விடுத்துள்ள அறிக்கையில் பின்வருமாறு தெரிவித்திருக்கிறார்:-

வகுப்புக் கலகத்தை யொட்டிய செய்திகள் பிரசுரிப்பது சம்பந்தமாக அனுஷ்டிக்க வேண்டிய முறைகள் பற்றி நிரந்தரக் கமிட்டி முடிவு செய்துள்ளது. பாக்கிஸ்தானிலுள்ள பிரதிநிதிகளான பத்திராதிபர்கள் நிலைமைபற்றியும் ஆலோசிக்கப்பட்டது. லாகூரில் செய்திகள் பலமாக தணிக்கை செய்யப்படுவதாக புகார்கள் வந்திருக்கின்றன.

பாக்கிஸ்தான் மந்திரி பழி சுமத்துகிறார்

கராச்சி, அக். 14

பாக்கிஸ்தான் அகதிகள் மந்திரியான பஸ்லுர் ரஹ்மான் பத்திரிகா நிருபர்களிடம் பின்வருமாறு தெரிவித்தார்:-

கிழக்கு பஞ்சாப்பில் 6 ஸ்தானங்களுக்கு மேற்பட்ட இலக்க அளவில் அகதிகள் சேதமடைந்தனர். மேற்குப் பஞ்சாப்பில் அததொகையில் ஒரு சிறு பகுதியே சேதமாயிருக்கும்.

சம்பவங்கள்

லக்னோ, அக். 14

முசோரியிலும் டேராடூனிலுமுள்ள முஸ்லிம் அகதிகள் சொததுக்களைப் பாதுகாக்க துருப்புகள் கண்ணிவேலி அடைத்திருக்கின்றனர். எச்சரிக்கையைக் கவனியாது அதனருகே சென்ற ஒரு வாலிபர் மாண்டார். பம்பாய் மெயில்லிலிருந்து-ஹைதராபாத செல்லும்போது 5 பிரயாணிகள் வெளியே தூக்கி யெறியப்பட்டனர். லர்க்கானுவல் ஒரு ரயிலே சிப்பந்தி கொலைப்பட்டார். (ராய்ட்டர், அ-பிரஸ்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சுதந்திரன்
THE "SUTANTIRAN"
194 ஏ, தட்டாத் தெரு, கொழும்பு.
போன்: 3611.

சர்வதித்த ஞ புரட்டாசி மீ 30உ
வியாழக்கிழமை

உஷார்!

யூ. என். பிக் கட்சியை ஸ்தாபித்தவர்களில் திரு. ஏ. எப். மொலமுரேயும் ஒருவர். யூ. என். பி அரசாங்கம் ஏற்படுத்த முயன்றவர்களில் இவர் விசேஷ சிரத்தை எடுத்தவராவர். இதற்காகப் பாராளுமன்றப் பொதுத் தேர்தலில் தம் கட்சிக்காக மிகவும் பாடுபட்டவர்.

இதற்குக் கைமாறாகத் திரு மொலமுரேயை பிரதிநிதிகள் சபையின் ஸ்பீக்கராகத் தெரிவு செய்ய யூ என். பிக் கட்சியினர் முனைந்ததில் யாதொரு ஆச்சரியமுமில்லை. நேற்று முன்தினம் அவர் பதினேழு அதிகப்படியான வாக்குகளால், இலங்கைப் பிரதிநிதிகள் சபையை முதலாவது ஸ்பீக்கராகத் தெரிவு செய்யப்பட்டுமுள்ளார்.

யூ. என். பிக் கட்சிக்குப் பொதுத் தேர்தலில் 42 அங்கத்தவர்கள் தான் கிடைத்தார்கள். அத்துடன் கவர்னரால் நியமனஞ் செய்யப்பட்ட ஆறு அங்கத்தவர்களும் சேர்ந்து கொண்டால் 48 பேர்கள்தான் யூ என் பிக்கு உண்டு. சுயேச்சைப் பேர்வழிகளில் இரண்டு தமிழ்ப் பிரதிநிதிகள் மந்திரிப் பதவிக்காக யூ என். பி முண்டாசு கட்டினார்கள். இன்னும் ஒருவர் காரியதரிசிப் பதவிக்காக யூ. என். பியை ஆதரிப்பதானார். ஆகவே வெளிப்படையாக 51 பேர் யூ. என். பிக் கட்சிக்கு உண்டு என்று நாம் கூறிவிடலாம். ஆனால் ஸ்பீக்கர் தெரிவில் 58 பேர் யூ. என். பியை ஆதரித்திருக்கிறார்கள் என்பது, திரு. மொலமுரேயை ஆதரித்த வாக்களித்ததிலிருந்து தெரிகின்றது. பட்டிருப்புச் சுயேச்சை அங்கத்தவராகிய திரு. எதிர்மனசிங்கம் வெளிப்படையாகவே திரு மொலமுரேயின் பெயரை, திரு. சிறறம்பலம் பிரேரித்தபொழுது அனுவதித்திருக்கிறார். ஆகவே மிகுதி ஆறு பேரும் சுயேச்சைப் பிரதிநிதிகளிலிருந்துதான் சாதகமாக வாக்களித்திருக்க வேண்டும். வாக்களிக்க இரு பிரதிநிதிகள் மறுத்ததருக்கிறார்கள். இந்த இருவரும் ஏது காரணம் கொண்டும் எதிர்க் கட்சியினருடன் சேரமாட்டார்கள் என்பதாகவே நாம் நினைக்க வேண்டியிருக்கிறது.

இந்நிலைமையில் யூ. என். பி அரசாங்கம் நிலையுறறிவிட்டதென்றே சொல்லிவிடலாம்.

சோல்பரித் திட்டத்திற்கு இப்பொழுது உண்மையில் விரோதமாக இருப்பவர்கள் இடது சாரிகளில் 15 பேர், தமிழ்க் காங்கிரஸில் 7 பேர், இந்தியன் காங்கிரஸில் 7 பேர் ஆக 29 பேர் நிச்சயம் இருக்கிறார்கள். இத்துடன் சுயேச்சைக் கட்சியிலுள்ள சிலரும் இருக்கிறார்கள்.

சோல்பரித் திட்டத்திற்கு நாட்டில் ஆதரவில்லையென்பது நடந்த பொதுத் தேர்தலில் நிரூபிக்கப்பட்டது. ஆனால் அதையே மறுபடியும், மறுபடியும் புகுத்த எண்ணுவதை மக்கள் பார்த்துக் கொண்டிருக்க முடியுமா? முடியாது; முடியாது!

தேச மக்கள் இனித்தான் உஷாராக இருக்க வேண்டும். தங்கள் தலைவர்களைத் தூங்க விடக்கூடாது. வெள்ளையறிக்கையையும் சோல்பரித் திட்டத்தையும் கண்டித்து இப்பொழுது யூ. என். பியிலுள்ள பலர் பாராளுமன்றத்தில் புகுந்தார்கள் என்பதை அடிக்கடி ஞாபகப்படுத்த வேண்டும். பிரதிநிதிகள் சபையுள்ளும், நாட்டிலும் நாட்டிற்கேற்ற அரசியல் திட்டம் அமைக்கப்பட ஒரு அரசியல் நிர்ணய சபை வேண்டுதல் வேண்டும்.

திரு. சேனநாயக்கா அடுத்த பெப்ரவரி வரைக்கும் பிரதிநிதிகள் சபையின் காரியக் கூட்டத்தையே இப்பொழுது தொடங்கி ஒத்திப்போட திட்டம் போட்டிருக்கிறார் என எண்ண

கொழும்புச் செய்திகள்.-

அடிஸன் பிரபு இலங்கை வந்து சேர்ந்தார்

கொழும்பு, அக். 16

அடிஸன் பிரபுவும் அடிஸன் சீமாட்டியும் விமான மார்க்கமாக நேற்று முன்தினம் பிற்பகல் 2-15 மணிக்கு ரதமலானை விமான நிலையத்துக்கு வந்து சேர்ந்தனர். இவரை ஸர் சார்ள்ஸ்கொலின்ஸ, திரு கே.வைத்தியநாதன், திரு எல். எஸ். பி. பெரேரா திரு ஈ. ஓ. லூட்ஸ் ஆகியோர் விமான நிலையத்தில் வரவேற்றனர். இவர் வெள்ளிக்கிழமை காலை புதுடில்லிக்குப் புறப்படுகின்றார். இன்று இலங்கை மந்திரி சபையினரை இவர் சந்திப்பார்.

* * *

வீடமைப்புத் திட்டம் அமுலுக்கு வர தாமதம்

முனிஸிபல் சபையின் வீடமைப்புத் திட்டப்படி கிரிஸப் பொனையில் ராணுவத்தினர் எடுத்துள்ள 33 ஏக்கர் நிலமும் எடுக்கப்படவேண்டும். அதனை முனிஸிபல் சபை எடுத்து வீடமைப்புத் திட்டத்தை ஆரம்பிப்பதற்கு இவ்வருட முடிவிற்கு முன் விடமுடியாதென்று தெரிவிக்கும் படி லண்டன் யுத்தக் காரியாலயம் கொழும்பிலுள்ள ராணுவ அதிகாரிகளுக்கு அறிவித்துள்ளது.

இப்பொழுது இது சம்பந்தமாக கொழும்பு மேயர் பிரதம மந்திரியுடன் ஏற்பாடுகள் செய்வாரென்றும் இடத்தைத் திருப்பவும் விரைவில் பெறுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படுமென்றும் அறியப்படுகிறது.

* * *

நகரில் மின்சார சப்ளை அபிவிருத்தி நடவடிக்கை

கொழும்பிலே இப்பொழுது மின்சார சப்ளை அதிகம் வேண்டுவதால் அதிகாரிகள் நிலைமையைச் சமாளிக்க தகுந்த நடவடிக்கைகளை எடுத்து வருகின்றனர். சர்க்கார் மின்சார சப்ளை பகுதிக்கு மேலதிகமாக மின்சார சப்ளை இயந்திரம் தருவிக்க ஏற்பாடு செய்யப்பட்டுள்ளதாகக் கூறப்படுகிறது. இந்த இயந்திரம் வந்ததும் நிலைமையில் நெருக்கடி குறையும் என்றும் தெரிவிக்கப்படுகிறது.

* * *

பாராளுமன்றத்திற்கு முன் தேசியப் பிரார்த்தனை தினம்

பாராளுமன்றம் நவம்பர் 25-ம் தேதி திறக்கப்படுவதற்கு முதற்தினமாகிய 24-ம் தேதியன்று எல்லாச் சமயத்தினரும் "தேசியப் பிரார்த்தனை தினமாக" அன்று கொண்டாட வேண்டுமென்று மேத. கவர்னர் தெரிவித்துள்ளார்.

பாராளுமன்றத் திறப்புவிழா தினத்தால மாற்றம் ஏற்படின் அதுபற்றி உடனே அறிவிக்கப்படும்.

* * *

அர்பன் சபைகளின் தேர்தல்

நேற்று முன்தினம் இரவு வெளியிடப்பட்ட சர்க்கார் கெஜட் அறிக்கையில் கீழ்க்கண்ட அர்பன் சபைகளின் தேர்தல் விபரங்கள் கொடுக்கப்பட்டுள்ளன.-

கொட்டே அர்பன் சபை - வார்டுகள் 1 முதல் 10.

ஜாஎலை அர்பன் சபை - வார்டுகள் 1 முதல் 4

அவிஸாவிளை அர்பன் சபை- வார்டுகள் 1 முதல் 5

கொட்டே அர்பன் சபை தேர்தலுக்கு நிற்கும் அபேட்சகர்கள் அக்டோபர் 29-ம்தேதியன்று அர்பன் சபைக் காரியாலயத்தில் பகல் 12 மணிக்கும் 1 மணிக்கும் இடையில் தம் பெயர்களை தெரிவிக்க வேண்டும்.

ஜாஎலை அர்பன் சபைதேர்தலுக்கு நிற்கும் அபேட்சகர்கள் அக்டோபர் 30-ம் தேதியும் அவிஸாவிளை அர்பன் சபை தேர்தலுக்கு நிற்கும் அபேட்சகர்கள் அக்டோபர் 31-ம் தேதியும் குறிப்பிட்ட நேரத்துக்கிடையில் பெயர்களைப் பதிவு செய்ய வேண்டும். இத்தேர்தல்களில் கலந்து கொள்ளும் அபேட்சகர்கள் ரூ 100 ஜாமீன் பணமாகக் கட்ட வேண்டும்.

இடமுண்டு. பின் ஒரு அடிமை டொமினியன் அந்தஸ்தைக் காட்டி மக்களை ஏமாற்றவும் முயற்சிப்பார். பொது மக்களே! கவனம்.

தமிழ் நாட்டுத் தேசிய கவியரசின் ஞாபகார்த்த விழா

எட்டயாபுரத்தில் மட்டிலா வைபவம்

இலங்கைப் பிரதிநிதிகளுட்பட ஐம்பதினாயிரம் மக்கள் விஜயம்

கவியரசியாம் கவர்னர் சரோஜினி, இந்தியா நிதிமந்திரி ஷண்முகம் பாராட்டுச் செய்திகள்

மேற்கு வங்க கவர்னர், சென்னை பிரதம மந்திரி பிரசங்கங்கள்

எட்டயாபுரம், அக். 13

தேசிய மகாகவி ஸ்ரீ சுப்பிரமணிய பாரதியார் ஞாபகார்த்த மண்டபத்தை, மேற்கு வங்க கவர்னர் ராஜாஜி இன்று விடியற்காலையில் திறந்துவைத்தார். சுமார் 50,000 மக்கள் கூடியிருந்தார்கள். மண்டபத்தை ராஜாஜி திறந்து வைக்கையில் ஏராளமான காந்த விளக்குகள் பிரகாசித்தன. நூற்றுக் கணக்கானவர்கள் படம் எடுத்தார்கள்.

"பாரதியார் ஒரு மகாகவி. அவரை ஞாபகத்தில் வைத்துக் கொள்ள வேண்டும் என்றால், அவரது கவிகளை படித்தால்மட்டும் போதாது. உட்கருத்தையும் அறிய வேண்டும். பாரதியார் வாழ்க்கையை மக்கள் பின்பற்ற வேண்டும். வாழ்க்கையில் பாரதியார் பட்ட துன்பம் கொஞ்சமல்ல; எனினும் அவர் மகிழ்ச்சியுடனேயே வாழ்ந்தார். அதுபோல எவ்வளவு கஷ்டங்கள் இருந்தாலும் மக்கள் மனம் தளரக்கூடாது" என்று ராஜாஜி தமது பிரசங்கத்தில் குறிப்பிட்டார்.

பகீரதனைப் போன்ற அரும் தபஸி

ராஜாஜி தமது பிரசங்கத்தில் மகாத்மா காந்தியை பகீரதனுக்கு ஒப்பிட்டுப் பேசினார். "கங்கையை பூமிக்குக் கொண்டு வர, பகீரதன் அருந்தவம் செய்ததுபோல, இந்தியாவின் விடுதலையைப்பெற மகாத்மா அரும்பாடுபட வேண்டியிருந்தது. கங்கையின் வேகத்தை ஏற்க யாரும் ஆளில்லாததால், பகீரதன் மீண்டும் தவம் புரிய நேர்ந்தது. அதேபோல் காந்திஜியும் மக்களுக்கு சுதந்திரத்தை எப்படி பாதுகாத்துக் கொள்வது எப்படி அமைதியாகவும் சந்தோஷமாகவும் வாழ்வது என்பதை போதிக்க வேண்டியிருக்கிறது. மகாத்மா காந்தி தமது முயற்சியில் வெற்றி பெற்று விடுவார் என்று நான் நம்புகிறேன். ஒவ்வொருவரும் மகாத்மாவின் முறைகளைப்பின்பற்ற வேண்டும்" என்று ராஜாஜி குறிப்பிட்டார்.

வைபவ விபரம்

நன்கு அலங்கரிக்கப்பட்ட பந்தலுக்கு ராஜாஜி ஊர்வலமாக அழைத்து வரப்பட்டார். பல தெருக்கள் வழியாக ஊர்வலம் வந்தது. பல சங்கங்கள் சார்பாக ராஜாஜிக்கு மாலைகள் சூட்டப்பட்டன. சூரியோதய நேரத்தில் ஸ்ரீமதி எம். எஸ். சுப்புலட்சுமி பாடிய வாழ்த்துப் பாட்டோடு, மண்டபத் திறப்பு விழா வைபவம் ஆரம்பமாயிற்று. மண்டபத்தை ராஜாஜி திறந்து வைத்ததும் காந்த விளக்குகள் பிரகாசித்தன நூற்றுக் கணக்கானவர்கள் படம் எடுத்தார்கள்.

ராஜாஜி பிரசங்கம்

ராஜாஜி பேசியதாவது:-பாரதியார் ஒரு மகாகவி. அவரது ஞாபகார்த்தம் மறையாமல் இருக்க வேண்டுமானால் அவரது கவிதைகளை படித்தால்மட்டும் போதாது; உள்கருத்தையும் உணர வேண்டும். பாரதியார் வாழ்க்கையை பின்பற்ற வேண்டும்? அவர் பட்ட துன்பம் கொஞ்சமல்ல; என்றாலும் மகிழ்ச்சியுடனேயே வாழ்க்கை நடத்தினார். அதுபோல எவ்வளவு கஷ்டங்கள் இருந்தாலும் மக்கள் மனம் தளரக் கூடாது. இன்று இந்தியா சுதந்திரமடைந்துவிட்டது. இந்த நாளில் பாரதியார் நம்மிடையே இல்லாதது பெருங்குறை. ஸ்ரீமான்கள். வீ. ஓ. சிதம்பரம் பிள்ளை, சுப்பிரமணிய சிவா மற்றும் பலர் சுதந்திரம் பெற எத்தனையோ வழிகளைக் கையாண்டார்கள். ஆனால் பாரதியாரோ உணர்ச்சியூட்டும் தேசிய கீதங்களைப்பாடியதன் மூலமாக தேசவிடுதலைக்கு உழைத்தார்

நமக்கு ராஜீய சுதந்திரம் வந்துவிட்டதென்றாலும் இன்னும் பல சுதந்திரங்கள் வரவேண்டியிருக்கின்றன. உணவு, துணி, ஜாகை நெருக்கடிகள் ஏற்பட்டிருக்கின்றன இவை எல்லாம் கொஞ்ச காலத்திற்கு இருக்கக் கூடிய கஷ்டங்களே. ஆகையால் மனம் தளராமல் சர்க்காருடன் ஒத்துழைத்து கஷ்டத்தைப் போக்க வேண்டும்

உலகமே இன்று இந்தியாவை பார்த்துக் கொண்டிருக்கிறது. தமிழ்நாட்டு மக்கள் தங்கள் கடமைகளை நிறைவேற்றி விடுவார்கள் என்பதே என் நம்பிக்கை.

'கவர்னர் பதவிபற்றி பெருமை வேண்டாம்'

அதிர்ஷ்டவசமாக எனக்கு கவர்னர் உத்தியோகம் கிடைத்தது ஆனால் தமிழர்கள் இதுபற்றி பெருமையடையக் கூடாது. அப்படி பெருமையடைவது ஏகாதிபத்திய மனப்பான்மை அந்த மனப்பான்மையை நேருஜி மிகவும் வெறுக்கிறார். அந்த உத்தியோகம் எனக்கு ஒரு சோதனை. சோதனைகள், பரீட்சைகளைப் போல, கொஞ்சகாலந்தான் இருக்கும். நான் கவர்னராக இருக்க விரும்பவில்லை; இருக்க முடியும் என்றும் எண்ணவில்லை. ஒரு வங்காளி, இந்த மாகாணத்திற்கு கவர்னராக இருப்பதாக வைத்துக்கொண்டு எண்ணிப் பார்த்தால்தான் அதிலுள்ள சிரமத்தை உணரமுடியும்.

கவர்னர் பதவியை ரொம்ப பிரமாதப்படுத்த வேண்டியதில்லை. இப்போதைய நிலைமையில் பிரதமர் பதவிதான் கவர்னர் பதவியைவிட முக்கியமானது.

இடுக்கண் வருங்கால் அதைக் கண்டு நகைப்பது தென்னாட்டு மக்களின் ஒரு அரிய பண்பு ஆகும். ரேஷன் குறைப்பு மற்ற கஷ்டங்களை ப்பற்றி அவர்கள் சிரித்துக்கொண்டே பேசுகிறார்கள். இது அவர்கள் பாக்கியம். தென்னாட்டுமக்களின் கீர்த்திமிக்க பாரம்பர்யம் பாரதியாரின் பாக்களால் சிரஞ்சீவித்துவம் அடைந்துவிட்டது. பாரதியாரின் நூல்களை குறிப்பாக பக்தி, தத்துவம் பற்றி அவர் இயற்றியவைகளை வாசிக்கவேண்டும் என்று ராஜாஜி கேட்டுக்கொண்டார். திரளான மக்கள் அளவுகடந்த உற்சாகத்தோடு, இப் பந்தலில் திரண்டிருப்பதே. இந்த வைபவம் மிக வெற்றிகரமானது என்பதை புலப்படுத்துகிறது என்று அவர் குறிப்பிட்டார்.

பிரதமர் ரெட்டியார் பிரசங்கம்

பிரதமர் ஸ்ரீ ராமசாமி ரெட்டியார், பாரதியாரின் உருவச் சிலையைத் திறந்துவைத்துப் பேசுகையில் கூறியதாவது:—

"பாரதியார் ஒரு அமரகவி. வருங்காலத்தை அவர் முன் கூட்டியே அறிந்து எழுதினார். தமிழ் வளர்ச்சிக்காக வெகு காலத்திற்கு முன்பு தமிழ்ச் சங்கம் அமைக்கப்பட்டது. ஆனால் பிற்காலத்தில் தமிழ்ப் புலவர்கள் மூலமாகத்தான் தமிழ் வளர்ந்தது. அந்தப் புலவர்களிலே கவி பாரதியும் ஒருவர். பாரதியார் நமக்கு இயற்றி வைத்துள்ள நூல்களுக்காக, அவருக்கு நாம் எவ்வளவோ கடமைப்பட்டிருக்கிறோம்."

பாரதியாரைப் பின்பற்றி புதிய உலகு சமைப்போம்

சென்னை சபாநாயகர் ஸ்ரீ. ஜே. சிவஷண்முகப்பிள்ளை, ராஜாஜி பேசிய பின்பு, பேசுகையில் "பாரதி விரும்பிய அமைபு இன்னும் ஏற்படவில்லை. சமூக பொருளாதார ஏற்றத் தாழ்வுகளை ஒழித்தாக வேண்டியிருக்கிறது. எல்லோரும் சமமாக இருக்கக்கூடிய நவ இந்தியாவை நிர்மாணிப்பதற்காக, இந்தியர்கள் எல்லோரும் பாரதியார் கூறிய மார்க்கங்களைப் பின்பற்றுவார்கள் என்றுநம்புகிறேன்" என்று கூறினார்.

பாரதியார் நூல்களைப் பாடபுத்தகமாக வைக்குமாறு யோசனை

குமாரராஜாமுத்தையாசெட்டியார் பேசுகையில் பாரதியாரின் கவிதைகளை 6 பாகங்களாகப் பிரித்து முதல் பாரத்திலிருந்து 6-ம்பாரம்வரை, அதைக் கட்டாய பாடமாக போதிக்க சர்க்கார் ஏற்பாடு செய்யவேண்டும் என்று கூறினார்.

மந்திரி டேனியல் தாமஸ்பேசுகையில் ஆழ்ந்த தூக்கத்திலிருந்த இந்தியர்களை தட்டியெழுப்பியது பாரதியாரின் கவிதைகள் தான் என்று கூறினார்.

புதுச்சேரி தெரு ஒன்றுக்கு பாரதி பெயர்

ராஜாஜி முடிவுரையாகப் பேசுகையில் வைபவம் வெற்றிகரமாக நடைபெற்றதற்காக தமது சந்தோஷத்தைத் தெரிவித்துக் கொண்டார். பாரதியார் தேசப் பிரஷ்டம் செய்யப்பட்டிருந்த காலத்தில் 12 வருஷ காலம் புதுச்சேரியில் வசித்து வந்தார் என்றும், அங்கு ஒரு தெருவுக்கு பாரதியார் பெயரிடுவற்காக, வந்த அழைப்பை அவசரவேலை காரணமாக,ஏற்க முடியாமல் போனதற்கு வருந்துவதாகவும் கூறினார்.

ஸ்ரீமான்கள் காமராஜ் நாடார், ஜீவானந்தம், ம. பொ. சிவஞான கிராமணியார், சோமசுந்தர பாரதியார், டி. கே. சிதம்பரநாத முதலியார், டாக்டர் டி. எஸ். எஸ் ராஜன், ஸ்ரீமதி சகுந்தலா பாரதி முதலியோர் பேசினார்கள்.

2 வருஷ காலத்திற்குள் இவ்வளவு பெரிய மண்டபம் நிர்மாணிக்கப்பட்டதைக் குறித்து ஸ்ரீ காமராஜ் தமது பாராட்டுதலகளைத் தெரிவித்துக் கொண்டார்.

"தாமிரபரணி நதிக் கரையிலே பாரதியாருக்கு ஞாபகார்த்த மண்டபம் எழுப்ப சில வருஷங்களுக்கு முனபு நான் செய்த முயற்சி ஏன் பலிக்காமல் போய்விட்டது என்பதைப் பற்றிதான் இப்பொழுது என் நினைப்பு சென்றுகொண்டிருக்கிறது" என்று டாக்டர் ராஜன் தம் பிரசங்கத்தில் குறிப்பிட்டார்.

பாரதியாரின் புத்திரி ஸ்ரீமதி சகுந்தலா பாரதி பேசுகையில் ஞாபகார்த்த மண்டபம் நிர்மாணித்ததற்காக, பாரதியார்குடும்பத்தினர் சார்பில் தமது நன்றியறிதலைத் தெரிவித்துக் கொண்டார்.

'கல்கி' ஆசிரியர் ஸ்ரீ. ரா. கிருஷ்ணமூர்த்தி ராஜாஜிக்கும் சென்னை மந்திரிகளுக்கும், ஞாபகார்த்த மண்டபம் நிர்மாணிக்க நன்கொடை தந்து உதவியவர்களுக்கும், வைபவத்தை வெற்றிகரமாக நடத்த உதவியவர்களுக்கும் நன்றி தெரிவித்தார்.

பாரதியார் மனைவியும், தமது குமாரத்தியோடு இந்த வைபவத்தில் கலந்துகொண்டார். அவர் மேடைமீது தோன்றிய போது, மக்கள் வெகு உற்சாகத்தோடு சந்தோஷ ஆரவாரம் செய்தனர்.

"பாரதி உலக கவி" கவியரசியின் செய்தி

எட்டயாபுரம், அக். 13

வைபவம் வெற்றிகரமாக நடைபெறவேண்டுமென்று வாழ்த்தி தமிழ்நாட்டிலிருந்தும்இந்தியாவின் இதர பாகங்களிலிருந்தும் ஏராளமான வாழ்த்துச் செய்திகள் வந்து குவிந்திருக்கின்றன.

"பாரதியார் தமிழ் நாட்டில் பிறந்து வளர்ந்தவரானாலும், அவரது நூல்கள் தமிழில் இயற்றப்பட்டனவாயினும், அவர் உலக கவி. பாரதி எல்லோருக்கும் பொக்கிஷம்' என்று ஐக்கிய மாகாண ஆட்டிங் கவர்னர் ஸ்ரீமதி சரோஜினி தேவி தம் வாழ்த்துச் செய்தியில் கூறியிருக்கிறார். அகதிகள் பிரச்னை காரணமாக ஏற்பட்டுள்ள வேலைத் தொந்தரவுகளால் தாம் வைபவத்தில் கலந்துகொள்ள முடியாமல் போய்விட்டதென்றும், அதற்காக வருந்துவதாகவும் அவர் மேலும் கூறியிருக்கிறார்.

நிதி மந்திரி வாழ்த்துச் செய்தி

சென்னை, அக். 14

எட்டையாபுரம் பாரதி மண்டபத் திறப்பு விழாவையொட்டி இந்திய சர்க்கார் நிதி மந்திரி திரு. ஆர். கே. ஷண்முகம் செட்டியார் மகா கவி பாரதியார் நாட்டிற்குச் செய்த சேவையைப் பாராட்டி வாழ்த்துச் செய்து அனுப்பியிருந்தார்.

இலங்கைப் பிரதிநிதிகள்

இலங்கையிலிருந்து ஏராளமான பிரதிநிதிகள் திறப்பு விழாவுக்கு விஜயம் செய்திருக்கிறார்கள்.

மண்டப அமைப்பு

இந்த மண்டபம் ரூ. 50,000 செலவில்நிர்மாணிக்கப்பட்டது ஊருக்கு முன்புறம், 3 ஏக்கர் பரப்புள்ள நிலத்தில் இது கட்டப்பட்டிருக்கிறது. மண்டப வாயிலில் தென்னிந்திய சிற்பங்களோடு கோபுரமும், இருபுறத்திலும் இரு விசாலமான கூடங்களும் இருக்கின்றன.

பிரகாசமான வெண்ணிறத்தோடு உள்ள இம்மண்டபத்தில் பொதுஜன இலவச வாசகசாலை ஒன்றும், கண்காட்சிசாலை ஒன்றும் இருக்கின்றன. அரசியல், தத்துவம் மத விஷயங்கள் பற்றி கவி எழுதிய புத்தகங்களும், அவரது சொந்த கைப்பிரதிகளும், மகா கவியால் உபயோகப்படுத்தப்பட்ட சாமான்களும் அங்கு வைக்கப்பட்டிருக்கும்.

மண்டபத்தில் படங்கள் வைக்கப்பட்டுள்ள அறையில் வால்மீகி, திருவள்ளுவர், காளிதாசர், தாகூர், சரோஜினி தேவி முதலியோர் படங்கள் வைக்கப்பட்டிருக்கின்றன.

பாரதியார் மொழிந்துள்ள முறைகளில் தமிழ்மொழி தமிழ் கலாசார அபிவிருத்திகளை நோக்கமாகக்கொண்டு, சிறு குருகுலம் ஒன்று சீக்கிரத்தில் இங்கு ஆரம்பிக்கப்படும் என்று தெரிகிறது.

கிரீஸபற்றி ரஷியாவின் பிரேரணைக்கு இந்தியா ஆதரவு

பாக்கிஸதான் எதிர்த்து வோட்டளித்தது

நியூயார்க், அக். 14

கிரீஸிலிருந்து பிரிட்டிஷ் துருப்புகளவாபசாக வேண்டும் என்று கூறும் ரஷியப் பிரேரணையை ஆதரித்து வழக்கம் போல, சோவியத் கோஷ்டி நாடுகள் வோட்டளித்தன. இந்தியாவும் சாதகமாக வோட்டளித்தது.

இப்பிரேரணையை எதிர்த்து வோடடுப்போட்ட பிரிட்டன் அமெரிக்கா முதலிய நாடுகளுடன் பாக்கிஸ்தானும் சேர்ந்து பிரேரணையை எதிர்த்தது. பிரேரணை தோற்றது.

இலங்கை-இந்திய பிரச்னை

ஸ்ரீ வி. வி. கிரியின் புதிய திட்டம்

யாழ்ப்பாணம், அக். 14

இலங்கை இந்தியர் பிரச்னையைச் சுமுகமாகத்தீர்ப்பதற்குத் தாம் ஒரு திட்டம் வகுத்துள்ளதாகவும் அத்திட்டத்துடன் தாம் டிஸம்பர் மாதம் புதுடில்லி சென்று பண்டிதநேருஜியிடம் அதனைச் சமர்ப்பிக்கப்போவதாகவும் திட்டம் வெற்றியடையுமென்று தாம் நம்புவதாகவும் இலங்கையிலுள்ள இந்திய சர்க்கார் பிரதிநிதி திரு. வி. வி. கிரி யாழ்ப்பாண இந்துக் கல்லூரி பரிசளிப்பு விழாக் கூட்டத்தில் பேசுகையில் தெரிவித்தார்.

பாரிஸில் வேலை நிறுத்தப் புயல்

30,000 கொழிலாளர் வேலைக்குச் செல்லவில்லை

மேலும் மேலும் பரவலாம்

பாரிஸ், அக். 14

பாரிஸ் நகரின் சுழாய் ரயில், பஸ் முதலிய வற்றில வேலை செய்யும் 30 ஆயிரம் போக்கு வரவுத் தொழிலாளர் இன்றுகாலை தொடக்கம் வேலை நிறுத்தம் செய்துள்ளார்கள். இதன்காரணமாக 40 லட்சம் பாரிஸ் மக்கள பாதிக்கப் பட்டிருக்கின்றதாகத் தெரிகிறது.

மேற்படி வேலை நிறுத்த முடிவு கமியூனிஸட் கட்சியின் தலைமையிலுள்ள அவர்களது தொழிற் சங்கத்தில் தீர்மானிக்கப்பட்டதாகும்.

இந்த வேலைநிறுத்தத்தை ஆரம்பிக்கவேண்டாம் என்று சோஷியலிஸட் பிரதம மந்திரி ராமடீர் செய்து கொண்ட வேண்டுகோளைத் தொழிலாளர் புறக்கணித்து விட்டார்கள். போலிஸ இலாகா தலைமைக் காரியாலயம் இந்த வேலைநிறுத்தத்தை "அரசாங்கத்துக்கு விடப்பட்டிருக்கும் முடிவான சவால்" என்று வர்ணித்தது. இங்கு குதிரைப் பந்தயங்கள் நாளை நடைபெற மாட்டா. இதற்குக் காரணம் "பந்தய லீஸடத" தில் வேலை செய்யும் தொழிலாளர்கள் இன்று காலை வேலைநிறுத்தம் செய்துள்ளதே

பிரெஞ்சு வர்த்தகக் கப்பல்களைச் சேர்ந்தமாலுமிகள் 32,000 பேரின் வேலை நிறுத்தம் வியாழக்கிழமை ஆரம்பிக்கலாம் என்று தெரிகிறது. இது சம்பந்தமாக தீர்மானிக்க கமியூனிஸட் தலைமையில் உள்ள அவர்கள் சங்கம் இன்று கூடுகிறது.

இன்றிரவு ரயில்வேத் தொழிலாளர் தாமும் வேலை நிறுத்தம் ஆரம்பிப்பதா என்பதை முடிவு கட்டக் கூடுகின்றனர். இவ்வேலைநிறுத்தங்கள் எல்லாம் வாழ்க்கைச் செலவுக்குப் போதிய சம்பளம் வேண்டும் என்ற கோரிக்கையோடு செய்யப்படுபவையே. ஆயுதம் தாங்கிய போலிசார் முக்கிய ஸ்தலங்களை இப்போ காவல் புரிந்து வருகின்றனர். (ராய்ட்டர்)

இளவரசி மார்கரெட் அயர்லாந்துப் பிரயாணம்

லண்டன், அக் 14

மார்கரட் இளவரசி இன்று லண்டனிலிருந்து வட அயர்லாந்துக்கு விமான மார்க்கமாகப் புறப்பட்டுச் சென்றார் அவருடன் மன்னரோ ராணியோ, அல்லது இளவரசி எலிஸபெத்தோ கூடச் செல்லவில்லை. இங்ஙனம் அவர் தனியாகச் செல்வது இதுவே முதல் தடவை. விமான நிலையத்துக்கு இளவரசி எலிஸபெத் அவரை வழி அனுப்புவதற்கு வந்திருந்தார். (ராய்ட்டர்)

காலராவை எதிர்த்துப் போராட்டம்

செலவுக்கு 50 லட்சம் ஸ்டெர்லிங் ஒதுக்கப்பட்டது

கெய்ரோ, அக். 14

எகிப்தில் காலரா நோய் காரணமாக 1000 பேர் இதுவரை மரித்துள்ளார்கள். இந்நோயை ஒழித்துவிடுவதற்காக நடத்தும் சுகாதாரப் போராட்டத்திற்கு அரசாங்கத்தால் 50 லட்சம் ஸ்டெர்லிங் ஒதுக்கிவைக்கப்பட்டுள்ளது. [ராய்ட்டர்]

டச்சு ராணியின் தற்காலிக ஓய்வு

இளவரசி ஜூலியானாவின் பதவி ஏற்பு

ஹேக்நகரம், அக். 14

டச்சு ராணி வில்ஹெல்மினா தற்காலிக ஓய்வெடுத்துக் கொள்வதன் காரணமாக இளவரசி ஜூலியானா இன்று பிற்பகல் ராஜரீகப் பொறுப்பைத் தற்காலிகமாக ஏற்றுக் கொண்டுள்ளார். ராணி வில்ஹெல்மினா மேற்படி வைபவத்தின்போது ஆஜராய் இருக்கவில்லை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மைசூருக்குப் பொறுப்பாட்சி

சமஸ்தான காங்கிரஸுக்கு வெற்றி

பெங்களூர், அக். 14

தென்னிந்தியாவில் இரண்டாவது பெரிய சமஸ்தானமாகிய மைசூர் அங்குள்ள சமஸ்தான காங்கிரஸின் கோரிக்கைப்படி பொறுப்பாட்சி சர்க்கார் விஷயமாக சமரஸம் செய்துகொண்டதாக அதிகார பூர்வமாக நேற்று அறிவிக்கப்பட்டது. செப்டம்பர் 1-ம் தேதி சமஸ்தான காங்கிரஸ் அமுலுக்குக் கொண்டுவந்த சட்டமறுப்பு இயக்கம் வாபஸ்பெறப்பட்டுவிட்டது. புதியஒழுங்கின்படி அமைக்கப்படும் மந்திரி சபையில் உள்ள 9 பேர்களில் பிரதம மந்திரி உட்பட ஆறு மந்திரிகளை காங்கிரஸ் நியமிக்கும். (ராய்ட்டர்)

மைசூர் சமாசத்துக்கு சர்தார்பட்டேல் பாராட்டு

புதுடில்லி, அக். 14

மைசூர் சமஸ்தானத்திற்கு பொறுப்பாட்சி அளிப்பது சம்பந்தமாக நடைபெற்ற பேச்சுவார்த்தைகள் வெற்றிகரமாக முடிவுற்றதற்காக மைசூர் மன்னரையும் திவான் ஸர் ஏ. ராமஸ்வாமி முதலியாரையும், சமஸ்தான காங்கிரஸ் தலைவர் ஸ்ரீ. கே. செங்கல்வராய ரெட்டியையும் பாராட்டி, இந்தியா டெபுடி பிரதமர் சர்தார் வல்லபாய்பட்டேல் செய்தியனுப்பியிருக்கிறார்.

எல்லை காந்தி சதி செய்கிறாராம்!

பிரதம மந்திரி எச்சரிக்கை விடுகிறார்

பெஷாவார், அக். 13

"கான் அப்துல் கபார்கானும் அவரது சகாக்களும் பாக்கிஸ்தானுக்கு எதிராக சதி வேலைகளை நிறுத்தாவிட்டால், கடுமையான நடவடிக்கைகளை எடுக்கச் சர்க்கார் தயங்காது" என்று எல்லைப் பிரதமர் கான் அப்துல் கயூம் கான் நிருபர்கள் கூட்டத்தில் பேசுகையில் குறிப்பிட்டார். மேலும் அவர் தெரிவித்ததாவது:-

"பாக்கிஸ்தான் அரசாங்கத்தையே நிலைகுலையச் செய்ய கபார் கான் சதிசெய்து வருகிறார். பகிரங்கமாக நடைபெறும் இந்த சதியை விட்டுக் கொண்டிருக்க முடியாது."

மேற்றிராணியாருக்கு அமோகமான வரவேற்பு

திரிகோணமலை, அக். 12

இன்று காலையில் திரிகோணமலை மேற்றிராணியார் மகா வந்தனைக்குரிய இக்னேஷியஸ் க்ளெனி ஆண்டவர் அவர்கட்கு சினனக்கடை கத்தோலிக்கர்களால் ஒரு வரவேற்பு நடத்தப்பட்டது. காலை ஏழு மணியளவில் சின்னக்கடை மார்க்கெட் சந்தியில் அதி மேற்றிராணியாரை வரவேற்றனர். பின்பு ரீகல் ஸ்டூடியோச் சந்தியில் அமைக்கப்பட்ட பீடத்திலிருந்து அதிமேற்றிராணியார் அவர்களை நில பாவாடையில் அழைத்துச் சென்றனர். பாலர், விருத்தர், கன்னியாஸ்திரிகள், பெரியோர் புடைசூழ ஊர்வலம், மேற்றிராணியார் கோவிலையடைந்து, பூசை முடிந்ததும் புகைப்படம் எடுக்கப்பட்டது. திரு. ஜெகநாதன் அவர்களாலும் மற்றும் பிரமுகர்களாலும் மாலை சூடப்பட்டது. பிரத்தியேக பந்தலில் பரத வாலிபர்களால் வரவேற்புபசாரஞ் செய்யப்பட்டதுடன் நன்றியுரையும் கூறப்பட்டது. சிங்களத்திலும், தமிழிலும், ஆங்கிலத்திலும் வாழ்த்துப் பத்திரங்கள் அளிக்கப்பட்டன. அநுதினமும் பூசைக்குச் சமூகம் தந்த சிறியோருக்குப் பரிசளிக்கப்பட்டது. அதிமேற்றிராணியார் அவர்கள் தமது பொன் மொழிகளால் நீண்டதோர் சொற்பொழிவாற்றினார். (ந-நி)

டோவர், அக். 14

இங்கிலாந்தில் சிறிது நாட்கள் தங்கியிருந்த வின்ஸ்டர் சோமகன் பிரானஸில் உள்ள கலேக்கு இன்று டோவரில் இருந்து புறப்பட்டுச் சென்றுள்ளார்.

சிங்களப் பத்திரிகை எழுதுவது:

விபரீதமான செலவுகள் வேண்டாம்

பொதுப்பணம் என்பது ஞாபகம் இருக்கட்டும்!

மந்திரிகளையும் பிரதிநிதிகளையும் தெரிந்தெடுத்திருப்பது சேவைக்காகவேயன்றி டம்பச் செலவுகளுக்காகவல்ல

"சிங்களஜாதிய" (14-10-47) எழுதிய ஆசிரியத் தலையங்கத்தின் மொழிபெயர்ப்பு:

தற்போது அமுலிலிருக்கும் பார்லிமெண்டு ஆட்சிமுறையினால தேசமக்களுக்குதாங்கமுடியாத பாரத்தை யுண்டாக்கிவிடாதபடி பார்த்துக்கொள்ள வேண்டியது பிரதம மந்திரியாரின் விலக்க முடியாத கடமையென்று எடுத்துக்காட்ட விரும்புகிறோம். "சுதந்திரம்" சரசமான விலைக்கு பெற்றுக் கொள்ளமுடியாதென்பதை நாமும் அறிவோம். அப்படியாயினும் கூட, சுயாதீனம் பெற்றுவிட்டதனால தாங்கமுடியாத பாரத்தை சுமந்து கொள்ளுவதற்கு பொது மக்கள் விரும்பமாட்டார்களென்பதை, அரசாங்கத்தை கைப்பற்றியிருக்கும் கட்சியினர் கண்டிப்பாக அறிந்து கொள்ளவேண்டியது, தேச மக்களின் சூழ் நிலையை அறிந்துகொள்ளுவதற்கு இலகுவாய் இருக்குமென்று நம்புகிறோம்.

வருடாவருடம் அரசாங்கத்தின் செலவு அதிகரித்துக்கொண்டேவருகிறதெனினும், எதிர்காலத்திலும் தொடர்ந்து வருமானம் அதிகரிக்குமென்று எண்ணுவதற்கு கிஞ்சிற்றும் காரணமில்லை. ஆனபடியால், தேச மக்களுக்கு கண்டிப்பாக அத்தியாவசியமற்ற வழிகளில் செய்யும் செலவுகளை கூடியமட்டும் குறைத்துக் கொண்டு தேசிய செல்வத்தை உறுதிப்படுத்த முயற்சி செய்வது அரசாங்கத்தின் ஞான தீட்சண்யமான நடவடிக்கையாகும்.

தேசமக்களின் சுகாதாரம்-கல்வி, சமூக சேவா சம்பந்தமாக செலவைக் குறைத்துச் செய்யக் கூடியவை எவ்வளவும் இருக்க முடியாது எனினும், உயர்ந்த சம்பள விஷயத்திலும் வெளித்தோற்றமான-ஆட்பரமான தட்புடல்களிலும் செலவிடுவதை எவ்வளவோ குறைத்துக் கொள்ள முடியுமென்பதை எவரும் ஒப்புக்கொள்ளுவார்கள்.

பார்லிமெண்டின் அலங்காரமும், பார்லிமெண்டு அங்கத்தவர்களின் சுக சௌகரியங்கள் சம்பந்தமாக எவ்விதநிதானமுமின்றி மனம்போல் பெறும்பணம் செலவு செய்யப்படுவதாகத் தெரிகிறது. அத்துடன் பார்லிமெண்ட் அங்கத்தவர்களுக்கும் செனட்டர்களுக்கும் மந்திரிகள்-உதவி மந்திரிகள், காரியதரிசிகள் இவர்களுடன் சம்பந்தப்பட்டமற்ற உத்தியோகஸ்தர்களுக்கும் தேசியச்செல்வநிலைக்கு தகாதவாறு உயர்ந்த சம்பளம் வழங்கப்பட்டால், தேசத்திற்கு தாங்க முடியாத பாரமாய் இருக்குமென்பதில் சந்தேகமில்லை.

சென்ற அரசாங்க சபையில் இருந்த அங்கத்தவர்கள் மந்திரிகளைப்போன்று, இந்தப் பார்லிமெண்டில் இரட்டிப்பாக இருக்கின்றனர். இதுவும் போதாதென்று ஒவ்வொரு மந்திரிக்கும் உதவி மந்திரியும், காரியதரிசியும் மேலதிகமாக இருக்கின்றனர். இப்படிப் பார்த்தால் நாலு மடங்காக அதிகரித்திருக்கிறார்களென்றே தெரிகிறது.

இங்கிலாந்து அரசாங்கத்தைப்போன்று, ஒவ்வொரு காரியங்களையும் இலங்கையும் செய்யவேண்டுமாவென்பது, பலரும் பேசிக்கொள்ளுகிற முக்கியமான பிரச்னையாயிருக்கிறது. எங்களுடைய அபிப்பிராயமென்னவென்றால், இங்கிலாந்தைப்போன்று இலங்கை அரசாங்கமும் அப்படி செய்யவேண்டிய அத்தியாவசியமில்லையென்பதே.

ஏழு மந்திரிகளுக்குப் பதிலாக 14 மந்திரிகள் அதிகம் என்பதுடன், இவர்களுக்கு மிகவும் இறக்கமயான சிவில் உத்தியோகஸ்தர்கள் நிரந்தரக் காரிய தரிசிகளாக இருப்பதினால் மந்திரிகளுக்கு பார்லிமெண்டுக் காரியதரிசிகள் வேண்டியதில்லையென்பதே எமது அபிப்பிராயமாகும். இன்னும் ஒவ்வொரு மந்திரிக்கும் சொந்தக் காரியதரிசிகளும் நியமிக்கப்போவதாகவும் ஒரு வதந்தி உலாவுகிறது. வெளித்தோற்றத்திலும் அலங்காரத்திலும் இவை விசேஷமாகத் தெரிந்தபோதிலும் இவையெல்லாவற்றிற்கும் காரணமாகப் பொதுப் பணம் செலவிடப்பட்டால் தேச மக்களுக்கு அத்தியாவசியமான புனருத்தாரண வேலைகளைச் செய்வதற்கு அரசாங்க பொக்கிஷம் சூன்யமாய் விடுமென்று நாம் சந்தேகிக்கிறோம்.

அதுவும் தேச சேவைக்காக முன் வந்த பார்லிமெண்டு அங்கத்தவர்களும் மந்திரிகளும், உதவி மந்திரிகளும், காரியதரிசிகளும் மற்றப்படி அவர்களைச் சேர்ந்த உத்தியோகஸ்தர்களினதும் சம்பளத்தை கூடிய மட்டும் குறைக்கவேண்டுமேயொழிய செல்வாக்கிற்கும் சுக சௌகரியத்திற்கும் தகுந்தாற்போல் சம்பளத்தை அதிகரித்துக் கொண்டே போனால் எங்கள் அரசாங்கம் இன்னால்வெண்டாகி குட்டிச் சுவராய்ப்போவதோடு தேசத்தில் துர்ப்பாக்கிய நிலைமை ஏற்படுமென்று இப்பொழுதே நாம் எச்சரிக்கை செய்கிறோம்.

டாலர் பேச்சுவார்த்தையில் இலங்கை

புள்ளி விபரம் வேண்டும்

கொழும்பு, அக். 15

இப்பொழுது பிரிட்டனுக்கும் அமெரிக்காவுக்கும் இடையில் நடக்கும் டாலர் நெருக்கடி பற்றிய பேச்சு வார்த்தைகளுக்கு இலங்கையிலிருந்தும் பல புள்ளி விபரங்களும் வேண்டியிருக்கின்றதெனறும் இப்புள்ளி விபரங்களைச் சரியாகத் தயாரித்து அனுப்புமபடி குடியேற்ற நாட்டு மந்திரி இலங்கை சர்க்காரைக் கேட்டுளளதாகவும் அறிவிக்கப்படுகிறது.

இந்த அறிவிப்பையில் அமெரிக்காவிலிருந்து இலங்கை தனக்கு அத்தியாவசியமானதென்று இறக்குமதி செய்த பொருளகள் பற்றிய விபரங்கள் இருக்குமென்றும் முழு விபரங்களும் லண்டனுக்கு தந்திமூலம அனுப்பப்படுமென்றும தெரிகிறது.

மலையிலிருந்து விழுந்தவர் பிரேதம்

திரிகோணமலை, அக். 12

சென்ற 10-ம் தேதி வெள்ளிக்கிழமை கோணேசர் மலையிலிருந்து விழுந்ததாகச் சொல்லப்பட்டவரின பிரேதம் இன்று பிற்பகல் உப்புவெளிக் கடற்கரையில் ஒதுங்கிக்கிடக்கக் காணப்பட்டது. அவரின் பெயர் கண்ணமுத்து செல்லை இராசா, மட்டக்களப்பைச் சேர்ந்தவர் என்றும் திரிகோணமலையில் மடத்தடி ஐக்கியப் பண்டகசாலையில் வேலைசெய்து பின் கொஞ்ச நாளாய் வேலை இல்லாமல் இருந்தவர் என்றும் அறியப்படுகிறது. (ந-நி)

தென் மேற்கு ஆப்பிரிக்கா

ஸகாட் பாதிரியார் கோரிக்கை

நியூயார்க், அக். 14

தென்மேற்கு ஆப்பிரிக்கா நிலைமையை ஆராய ஐக்கிய தேச ஸதாபனம் மத்தியஸ்தல விசாரணைக் கமிட்டியை அனுப்பிவைக்கும்படி ஸகாட் பாதிரியார் நேற்று ஸதாபனத்தாரைக் கேட்டுக்கொண்டார். (ராய்ட்டர்)

ஐந்து வயதுச் சிறுவனின் அடங்காத கோபம்

தாயும் மகனும் கிணற்றில் வீழ்ந்த சம்பவம்

சாவகச்சேரி, அக். 13

கொடாவில் வசியாகிய சோமசுந்தர ஐயர் அவர்களின் ஐந்து வயதுப் புதல்வன் பரமசாமி ஐயர் (12-10-47)ல் ஞாயிற்றுக்கிழமை மாலை நான்கு மணியளவில் தனது சகோதரி பூபதியம்மாளுடன் சண்டையிட்டுக் கொண்ட கோபங் காரணமாகத் தங்கள் வீட்டிலுள்ள ஓர் ஆழமான கிணற்றில் வீழ்ந்து விட்டார். இதனைக்கண்டபையனின் தாயார் தனது மகனுடைய உயிரைக் காப்பாற்ற பலமுறை முயன்றும் பயனளிக்காமையால் தானும் மகனுடன் கிணற்றில் வீழ்ந்தார். இப்பரிதாப சம்பவத்தைக் கேள்வியுற்ற அயல் வீட்டுக்காரர் அயற் கிராமத்தவர்கள் திரளாகவந்து பையனையும் தாயாரையும் கிணற்றிலிருந்து வெளியே எடுத்தனர். இரு வரும் உயிருடன் இருக்கின்றனர். (ந-நி)

ஆதித் திராவிட மகாஜன சங்கம்

கொள்ளுப்பிட்டி, அக். 12

ஆதித் திராவிட மகாஜன சங்கத்தின் பொதுக் கூட்டம் கொள்ளுப்பிட்டியிலுள்ள தர்மகீர்த்தி மாவத்தையில் சங்கத் தலைவர் திரு எஸ். எஸ் பெரியசாமி தலைமையின் கீழ் நடைபெற்றது. இலங்கை பாராளுமன்றத்திற்கு தேர்ந்தெடுக்கப்பட்ட திருவாளர்கள் கே. ராஜலிங்கம், எம். வி. வேலுப்பிள்ளை முதலியவர்களைப் பாராட்டி தீர்மானம் நிறைவேற்றியபின் காரியதரிசி அவர்களால் 7-10-47ல் சங்கத் தூதுக்கோஷடி இந்திய அரசாங்கப் பிரதிநிதி திரு வி. வி. கிரி அவர்களை பேட்டி கண்டது சம்பந்தமாக ஓர் அறிக்கை வெளியிட்டார்.

அதன்பின் ஆசிரியர் பி. அருளானந்தம் அவர்களால் "நமது எதிர்காலம்" என்னும் பொருள் பற்றி ஓர் சொற்பொழிவு நிகழ்த்தினார்.

கிருஷிக விளையாட்டுச் சங்கம்

மண்டூர் ஸ்ரீ இராம கிருஷ்ண மிஷன் பாடசாலையில் ஒரு கிருஷிக விளையாடுச் சங்கம் ஆசிரியர் த. யோகநாதன் அவர்கள் தலைமையில் புதிதாக நிறுவப்பட்டது.

உத்தியோக தெரிவு நடைபெற்ற பின் மாணவரின் ஐந்து பிரிவுகளுக்கும் காந்தி, விவேகானந்தா, ஜவஹர்லால் நேரு, ராஜாஜி சுபாஷ் சந்திர போஸ் என்ற நாமங்கள் இடப்பட்டன. நீலம், பச்சை, மஞ்சள், சிவப்பு, வெள்ளை நிறச்சின்னங்கள் குறிக்கப்பட்டன.

அகில இலங்கை நேத்தாஜி மகாசபை

யாழ்ப்பாணம், அக். 12

ஷை சபையின் விசேஷ காரியக் கமிட்டிக் கூட்டம் ஒன்று இன்றைய தினம் பகாசபை மண்டபத்தில் திரு கதிப்புக்குட்டி அவர்களின் தலைமையில் நடைபெற்றது. அவ்வமயம் கீழ்க்காணும் தீர்மானம் ஏகமனதுடன் நிறைவேற்றப்பட்டது

அகில இலங்கைத் தமிழ்க் காங்கிரசும், நகரசபைத் தலைவர் திரு சி பொன்னம்பலமும், தேசிய தமிழ் சங்கத் தலைவர் திரு எஸ். ஆர். கனகநாயகமும் கேட்டபடி "சிங்கக் கொடி" அலங்காரத்திற்காகவேனும் பறக்க விடுவதைத் தடை செய்தல் வேண்டும்.

பூகம்பத்தினால் 5 கிராமங்கள் நாசம்

டெஹ்ரான், அக். 14

கிழக்குப் பாரசீகத்தில பிர்ஜாண்ட் என்னுமிடத்தில் பூமி அதிர்ச்சியினால ஐந்து கிராமங்கள முற்றாக நாசமடைந்து விட்டன என்று டெஹ்ரான் பத்திரிகை யொன்று கூறுகின்றது. அழிபாடுகளிடையே கிடந்து சுமார் 210 பிரேதங்கள் எடுக்கப்பட்டுள்ளன வென்றும் கூறப்படுகிறது. (ராய்ட்டர்)

இலங்கை - ஆஸ்திரேலிய விமானப் போக்குவரவு

ஆஸ்திரேலிய அரசாங்கம் அனுமதி மறுத்ததா?

கொழும்பு அக். 14

ஆஸ்திரேலிய விமானக் கம்பெனி ஒன்றின் டைரக்டரான ஐ. என். ஹோலிமன் தமது கம்பெனி இலங்கைக்கும் இந்தியாவுக்குப் விமானப் போக்குவரவு ஏற்படுத்த விரும்புவதாகவும், ஆனால் ஆஸ்திரேலிய அரசாங்கம் அதனை அனுமதிக்கவில்லை என்றும் குறிப்பிட்டதாகத தெரிகிறது.

பிரஸ்தாப கம்பெனி டைரக்டர் ஆஸ்திரேலியா செல்லும் மார்க்கத்தில் இலங்கை துறைமுகத்திற்கு வந்திருக்கும் "ஓரியன்ட" கப்பலில் ஒரு பிரயாணி என்றும் அறியப்படுகிறது.

தேயிலைத் தொழிற்சாலையில் கொள்ளை

கொழும்பு, அக் 15

நேற்றிரவு நோர்வுடில் இருக்கும் ஓர் தேயிலைத் தொழிற்சாலை, கள்வர்களால் சூறையாடப்பட்டது. மொத்தம் ரூபா 1183 சதம் 50 பெறுமதியான 789 றாத்தல் தேயிலை தூள் களவாடப்பட்டதாகத தெரிகிறது.

போலிஸார் கூற்றுப்படி ஜன்னல் உடைக்கப்பட்டு அதனூடாகவே கள்வர்கள் புகுந்திருப்பதாகத் தெரிகிறது

புதிய கப்பற் போக்கு வரத்து

கனடா ஏஷியாட்டிக் லைனின் புதிய முயற்சி

கொழும்பு, அக். 14

கானடா ஏஷியாட்டிக் லைன் கப்பல் கம்பெனியின் புதிய பிரயாணச் சேவை ஒன்று ஆரம்பித்துள்ளது. இச் சேவை மொன்ட்ரீல், மத்திய தரைத் துறைமுகங்கள், இலங்கை, இந்திய சீனத் துறைமுகங்களுக்கிடையே நடப்பதாகும். இச் சேவை ஆரம்பத்தின் பின் முதலாவது தடவையாக "ரொக்ஸைட்" என்னும் கப்பல் இன்று காலை கொழும்புத் துறைமுகத்துக்கு வந்து சேர்ந்துள்ளது.

ராயல் கடற்படையினர் கலைக்கப்படுவர்

கொலா, அக் 15

ராயல் கடற்படையிலிருந்து கடற்படையினரைக் கலைப்பது பற்றி நடவடிக்கை எடுக்கப்படுகிறது. அடுத்த மார்ச்சு மாதத்துடன் இவ் வேலைகள் முடிந்து விடுமென்றும் இப்பொழுது முதல் 1948 மார்ச்சு மாதம முடியுமுன் சுமார் 45,000க் கதிகமான கடற்படையினர் கலைக்கப்பட்டுவிடுவர் என்றும் கூறப்படுகிறது.

அரிய நூல் வெளிவந்து விட்டது!

பாக்கிஸ்தான் விளக்கம்

ஜனாப் துர்ராணி அவர்களால் எழுதப்பட்ட "MEANING OF PAKISTAN" என்ற நூலின் தமிழ் மொழி பெயர்ப்பு பாக்கிஸ்தானைப் பற்றி இம்மாதிரியான நூலொன்று இதுவரை தமிழில் வெளியானதில்லை.

அழகிய முகப் படம்

320 பக்கங்கள் கிளேஸ் கடிதம்

சொற்ப பிரதிகளே அச்சிடப்பட்டிருக்கின்றன.

முந்துங்கள் விலை ரூ. 3-50

இந்தியா ரூ. 3-8-0.

V. P. வேறு

கிடைக்கும் இடங்கள்:-

V. M. ஷம்சுத்தீன்,

85, பழைய சோனகத்தெரு, கொழும்பு.

எல். கே. ஷேக் முகம்மது, பிரதர்ஸ் (மரைக்கார் கடை) பூக்குளம் பார்க்கிற்கு எதிரே திருச்சினாப்பள்ளி.

கல்வியே கருந்தனம்

அற்புதமானது! ஆனந்தமளிப்பது!!

மனதிற்கு பரவசமும் உல்லாசமும் ஊட்டுவது

இப்படியாக பாலர் முதல் பெரியோர்வரை ஏகோபித்து புகழ்வதெல்லாம்

மேனகா மார்க் லொசிஞ்சர்களே!

மேனகா மார்க் லசிஞ்சர்கள் ஒவ்வொன்றிலும் தேகத்திற்கு வலிமை அளிக்க வல்லதும் இரத்த விருத்தியுண்டாக்குவதுமான குளுக்கோஸ் எனும் சத்து சேர்ந்திருக்கிறது அத்துடன் மனதிற்கு நல்மணமும் நற்சுவையும் கொடுக்கக்கூடிய பழரசச் சத்தும் சேர்ந்து இதற்கென்றே இந்தியாவிலிருந்து தருவிக்கப்பட்ட நிபுணர்களைக்கொண்டு சாஸ்திரமுறைப்படி தயாரித்து யாவருக்கும் எளிதில் கிடைக்கக்கூடிய விதத்தில் சரசமான விலையில் டின்களில் அடைத்து விற்கப்படுகின்றது.

மேனகா மார்க் லொசிஞ்சர்

எல்லா முக்கியவியாபாரிகளிடமும் கிடைக்கும்

தயாரிப்பாளர்கள்:-

ராஜா இன்டஸ்ரியல் வேர்க்ஸ்,

71, புதிய சோனகத் தெரு, கொழும்பு.

Telegram: "SWEETS" Telephone: 2737

கீழ்க்காணும் வியாபாரிகளை நமது முக்கிய விநியோகஸதர்களாக நியமித்திருக்கிறோம்.

V. T. செல்லையா அன் கோ, குருநாகல்
K. முருகேசு அன் கோ, " "
மனோன்மணி ஸ்டோர், கேகாலை Kegalle.
W. E. M. பாக்ஷா சாகிப் அன் கோ, நாவலப்பிட்டி
N. B. அந்திரிஸ சில்வா அன் கோ, கம்பளை
M. சேகு அலி ராவுததர் அன் கோ, வத்துகாமம்
A. S. M. முகைதீன் அன் கோ, மாத்தளை
M. T. செல்லையா அன் கோ, கெக்கிராவ
K. சிவகுநாதப்பிள்ளை அன் சன்ஸ், யட்டியாந்தோட்டை
S. நாகமுத்து, ருவான்வெளை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மழையின்மையால் விவசாயிகள் கஷ்டம்

காரைநகர் விவசாயிகள் சங்கக் கூட்டத்தில் தீர்மானங்கள்

யாழ்ப்பாணம், அக். 15

காரைநகர் விவசாயிகள் சங்கத்தின் வருடாந்தப் பொதுக் கூட்டம் காரைநகர் சுப்பிரமணிய வித்தியாசாலை மண்டபத்தில் சனிக்கிழமை நடைபெற்றது. திரு ஏ எம். அம்பலவாணர் தலைமையில் அடுத்த வருட நிர்வாகிகள் தெரியப்பட்ட பின் தற்கால விவசாய முறைகள் பற்றி சர்க்கார் விவசாய அதிகாரி திரு கே. ஆறுமுகம் பேசினார். விவசாயிகளுக்குச் சர்க்கார் உதவிகள்பற்றி திரு. சங்கரப்பிள்ளை பேசினார்.

இவ் வருடத்தில் மழையின்மை காரணமாக இப்பொழுது விதைக்கப்பட்டு முளைத்துள்ள நெற் பயிர்கள் வெப்பத்தினால் கருகி அழிந்து போனால் மீண்டும் விதைக்க விதை நெல்லு இங்குள்ள விவசாயிகளிடம் இல்லையென்றும் சர்க்கார் இங்குள்ளவர்களுக்கு விதை நெல்லை விலைக்குச் சப்ளை செய்ய வேண்டுமென்றும் இது சம்பந்தமாக சர்க்கார் ஏஜண்டை பேட்டி கண்டு பேசவேண்டுமென்றும் ஆலோசிக்கப்பட்டது. இக்கூட்டத்தில், புதன் கிழமைக்குள் மழை பெய்யாது விடின் புதிதாக வந்தை நெல்லைச் சர்க்காரிடமிருந்து விலைக்கு வாங்குவது சம்பந்தமாக சர்க்கார் ஏஜெண்டைப் பேட்டி காண திருவாளர்கள் ஏ. எம். அம்பலவாணர், எஸ். சங்கரப்பிள்ளை ஆகிய இருவரையும் தெரிந்துள்ளதாக ஒரு தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. இவ் வருடம் விவசாயிகளுக்கு பசளை சப்ளை செய்யப்படாததால் இச் சங்கம் மூலம் காரைநகர் விவசாயிகளுக்கு பசளை இலவசமாக சர்க்கார் அளிக்க வேண்டுமென்று மேற்படி பிரதிநிதிகள் சர்க்கார் ஏஜண்டைக் கேட்டுக்கொள்ள வேண்டுமென்றும் தீர்மானிக்கப்பட்டது.

வீட்டில் உள்ள எல்லோருக்கும்மயக்கமருந்து

சமையற்காரனுக்குச் சிறைத் தண்டனை

நீர்கொழும்பு, அக். 15

டேவிட் பால சூரிய என்னும் 30வயதுச் சமையற்காரன் தான் வேலை செய்து வந்த வீட்டில் இருக்கும் 10 பேரைக் கொலைசெய்ய முயன்றதாகவும், வீட்டில் இருந்த பொருட்களைக் களவெடுக்கும் நோக்கத்துடன் ஒரு மயக்க மருந்தை மேற்படி பத்துப் பேருக்கும் அவர்களை அறியாமல் கொடுத்ததாகவும் நீர்கொழும்பு சுப்ரீம் கோர்ட்டில் குற்றஞ் சாட்டப்பட்டான்.

எதிரி தான் குற்றவாளி என்பதை ஒப்புக்கொண்டான் அதன் பேரில் அவனுக்கு 2 வருட சிறைத் தண்டனை விதிக்கப்பட்டது.

மேற்படி குற்றவாளி இதற்குமுன் 9 தடவை குற்றத் தீர்ப்புப் பெற்றவன் என்றும் தற்போது 25 வருட சிறைத் தண்டனை அனுபவித்து வருகிறான் என்றும் சொல்லப்பட்டது.

யாழ்ப்பாண முஸ்லிம் திருச் சபை

மேற்படி சபையின் விசேஷக் கூட்டம் ஒன்று சென்ற 10-7-47ல் சபை இல்லத்தில் கூடியது. அவ்வமயம் இலங்கை முஸ்லிம்களின் கல்வி முன்னேற்றத்திற்காக திருவாளர் ஏ. எம். ஏ. அஸீஸ்அவர்களால் ஆரம்பிக்கப்பட்டிருக்கும் கல்வி சகாய நிதிக்கு எங்களது சபையாராலும், நிதியளிக்க வேண்டுமென காரியதரிசியால் கொண்டுவந்த பிரேரணை ஏகமனதாக ஆமோதிக்கப்பட்டது.

இலங்கைக்கு ஒரே மத்திய மருந்துத் தொழிற்சாலை

நிறுவுவதற்கு அரசாங்க முஸ்தீபு

கொழும்பு, அக். 15

இலங்கையில் குயினைன், கபீன், சுரு மீன்எண்ணெய்முதலியவற்றைத் தயாரிப்பதற்காக வெவ்வேறு தொழிற்சாலைகள் தற்போது இருந்துவருகின்றன. இவற்றை ஒன்று சேர்த்து ஒரு மத்திய ஔஷதத் தொழிற்சாலையை நிறுவ அரசாங்கம் இப்போது யோசித்து வருகிறது. இதுபற்றிய முடிவான ஆலோசனைகள் அரசாங்கத் தொழிற்சாலைகளின் பொது மானேஜருக்கு சமர்ப்பிக்கப்படும்.

கைத்தொழில் இலாகா ரசாயன நிபுணரான டாக்டர் கங கூலியும் இது சம்பந்தமாக கலந்தாலோசிக்கப்படுவார். சமீபத்தில் அவர் இங்கிலாந்து சென்று அங்குள்ள ஔஷத ரசாயன சாலைகளில் முக்கிய மானவற்றைப் பார்வையிட்டு பின்னர் கைத்தொழில் இலாகா டைரக்டருக்கு ஒரு அறிக்கை சமர்ப்பிப்பார் என்றும் தெரிகிறது.

இந்தியாவில் பயிற்சிபெற்ற இரு விவசாய அதிகாரிகள்

கொழும்பு, அக். 16

இந்தியாவிலே விசேஷ பயிற்சி பெறுவதற்குச் சர்க்கார் உபகாரச் சம்பளத்துடன் சென்ற திரு டி. ஏ. வீரசிங்கா, திரு. டி. வேலாயுதன் (விவசாய இலாகா அதிகாரிகள்) ஆகிய இருவரும் இந்தியாவில் இரண்டு வருட கால பயிற்சியையும் முடித்துகொண்டு இலங்கை திரும்பிவிட்டனர். நிக்கரவட்டியாவிலே திரு. வீரசிங்காவும், பலாங்கொடையில் திரு. வேலாயுதனும் பதவி ஏற்றுள்ளனர்.

பஸ் கம்பெனி டைரக்டர் மீது வழக்கு

எதிரிகளை நீதிபதி விடுதலை செய்தார்

யாழ்ப்பாணம், அக். 15

சட்டவிரோதமாக கூட்டம் கூடியதாகவும் பஸ்ஸில் பயங்கரமான ஆயுதங்களைக்கொண்டு சென்றதாகவும், ராமன் கிருஷ்ணன், ஈ. கந்தையா ஆகிய இருவருக்கும் துப்பாக்கியால் சுட்டுக் காயம் விளைத்ததாகவும் யாழ்ப்பாணம் வட இலங்கை பஸ கம்பெனியைச் சேர்ந்த டைரக்டரில் ஒருவரான திரு ஆறுமுகம் வேலுப்பிள்ளை, கே குமாரசாமி, வி. ஆறுமுகம் ஆகியவர்கள் மீது குற்றம் சாட்டிக் கொண்டுவரப்பட்ட வழக்கு யாழ்ப்பாணம் மாஜிஸ்டிரேட் கோர்ட்டில் விசாரணைக்குஎடுக்கப்பட்டது விசாரணை முடிவில் மாஜிஸ்டிரேட். எதிரிகள் குற்றவாளிகளல்லவென்று கூறி விடுதலை செய்தார்.

பம்பாய் சட்டசபை அங்கத்தினர் கொலை

சத்தாராஜில்லாவில் அட்டூழியங்கள்

பூனா, அக். 14

சத்தாராஜில்லாவில் வால்வா தாலூகாவைச் சேர்ந்த காமேரி கிராமத்தில் பம்பாய்சட்டசபை காங்கிரஸ கட்சி அங்கத்தினர் திரு. கே. டி. பட்டில் கொலை செய்யப்பட்டார். இந்த ஜில்லாவில் துஷ்டர்கள ரத்தப புரட்சி இயக்கத்தில் சேர்ந்து காங்கிரஸ் வாதிகளைக் கொலை செய்து வருகிறார்கள். கடந்த 12 மாதங்களில் 5 பேர்கள் இவ்விதம் கொலையுண்டனர். அதே கிராமத்தில் ஒரு வருடத்திற்கு முன திரு. சந்தரோஜி என்பவர் கொலை செய்யப்பட்டார். அவரும் பம்பாய் சட்டசபை காங்கிரஸ்கட்சிஅங்கத்தினராகஇருந்தவர். அதன் பிறகு இரு காங்கிரஸ ஊழியர்களை முக மூடியணிந்த பேர்வழிகள் சுட்டுக் கொன்றனர். அதற்குப் பின் சிவமஹர் என்பவர் மோட்டார் சைக்கிளிலிருந்து கீழே தள்ளப்பட்டு சுடப்பட்டுக் கொலை செய்யப்பட்டார். எல்லாக்கொலைகளும் வால்வா தாலூகாவிலேயே நடைபெற்றன.

போலிஸ இன்ஸ்பெக்டர் ஜெனரல்அங்குசென்றிருக்கிறார்.

தென்னாப்பிரிக்காவில் நிறத் துவேஷம்

அமெரிக்கா, பிரிட்டன் ஆஷாடபூதித்தனம்

ரஷியா சாட்டை கொடுக்கிறது

மாஸகோ, அக். 15

நேற்று மாஸ்கோ ரேடியோ கீழ்க் கண்ட செய்தியை ஒலிபரப்பியது:- ஏகாதிபத்தியக் கொள்கையான நிறத் துவேஷம் தென்னாப்பிரிக்காவில் தலை விரித்துப் பேயாட்டம் ஆடுகிறது. இதைக் கண்டித்து சென்ற வருடம் ஐக்கிய தேச அசெம்பிளி தீர்மானம் நிறைவேற்றிய பின் தென்னாப்பிரிக்காவில் இந்த நிறத் துவேஷம் மேலும் பயங்கரமாக அதிகரித்திருக்கிறது. இந்த வருடம் நடைபெறும் அசெம்பிளி கூட்டத்தில்கூட அநேக பிரதிநிதிகள் பிரிட்டிஷ் குடியேற்ற நாட்டுமுறை ஊழல்களை கண்ணில் மண்ணை தூவி மறைப்பதற்காக பணிக்கணக்காக சதியாலோசனைப் பேச்சுகள் நடத்தி வருகிறார்கள் இந்த வெட்கக்கேடான நிறத் துவேஷக் கொள்கையை ஆதரிக்க முன் வரும் அமெரிக்கா அடிமையும் அவன் எஜமானனும் அத்யந்த நண்பர்களாக இருப்பதாகவே தாந்தம் பேசிஉலகை ஏமாற்றப் பார்க்கிறது. அடிமைப் பட்டுக் கிடக்கும் நாடுகளின் சுதந்திரத்திற்காக ஓயாது போராடி வரும் மற்ற ஜனநாயக நாடுகளும் சோவியத ரஷியாவும் அமெரிக்கா, பிரிட்டனின் ஆஷாடபூதித்தனத்தை அம்பலப்படுத்தவருகின்றன.

ஸ்ரீமதி விஜயலட்சுமி சூடு கொடுத்த பேர்வழி ஓடுகிறார்

பிரிட்டோரியா, அக். 15

1944 வது வருடமுதல் லண்டனில்தென்னாப்பிரிக்கயூனியன் சர்க்காரின் ஹைகமிஷனராக இருந்த 61 வயதுள்ள திரு. நிக்லஸ் தேச அசௌக்கியத்தின் காரணமாக பதவியிலிருந்து விலகிக் கொள்கிறார் நவம்பர் 13-ம் தேதி அவர் விலகிவிடுவார். இவர் இங்கிலாந்தில் பிறந்தவர். இளம் பிராயத்தில் இந்தியாவிலும் பர்மாவிலும் பிரிட்டிஷ் ராணுவத்தில் இருந்தார். பிறகு இலங்கையிலிருந்து தென்னாப்பிரிக்க யுத்ததின் போது தென்னாப்பிரிக்கா வந்தார். சென்ற நவம்பர் மாதம் ஐக்கிய தேச அசெம்பிளிக்கு தென்னாப்பிரிக்காபிரதிநிதியாக வந்த பேசியபோது இந்தியா பிரதிநிதி ஸ்ரீமதி விஜயலட்சுமி பண்டிட் டிடம் சூடுகள் வாங்கினார். தென்னாப்பிரிக்காவின் இந்தியர் பிரச்னை விவாதிக்கப்படுகையில் அவர் கூறியவிஷயங்கள் ஒவ்வொன்றுக்கும் ஸ்ரீமதி விஜயலட்சுமி பண்டிட் சுடச்சுடப் பதில் கொடுத்து அவர் வாயை அடக்கினார்.

தென் மேற்கு ஆப்பிரிக்கா

நியூயார்க், அக். 15

தென் மேற்கு ஆப்பிரிக்க பிரச்னை சம்பந்தமாக தர்மகர்த்தா கமிட்டி நியமித்த சப் கமிட்டியில் இந்தியாவின் தீர்மானத்தைப் பற்றி சமரசம் ஏற்படவில்லையென்று தர்மகர்த்தாக் கமிட்டிக்கு நாளை அறிவிக்கப்படும். (ராய்ட்டர்)

சர்வதேச தொழிலாளர் ஸ்தாபனங்கள் மகாநாடு

கொழும்பு, அக் 16

புதுடில்லியில் இன்னும் சில வார காலததுள் நடக்க இருக்கும் சர்வதேச தொழிலாளர் ஸதாபனங்கள் மகாநாட்டுக்கு இலங்கைப் பிரதிநிதியாக யாரை அனுப்புவதென்று இன்னமும் நிர்ணயம் செய்யப்படவில்லை. இம்மகா நாட்டுக்கு இலங்கைப பிரதிநிதி செல்வார் என்று தொழில், சமூக சேவைமந்திரிதெரிவிக்கின்றார்இம் மகாநாட்டுக்குச் செல்லும் பிரதிநிதிக்கு வேண்டிய பொக்கு வரத்து செலவுகள் முதலியனவுக்கான மான்யத்தைச் சர்க்கார் அங்கீகரித்துள்ளது. நவம்பர் 27-ம் தேதி சர்வதேச தொழிலாளர் ஸதாபனங்களின் மகாநாடு புதுடில்லி அரசியல் நிர்ணய சபை மண்டபத்தில் கூடும்.

ஆசியா தொழில் மகாநாடு

காந்திஜி ஆரம்பித்து வைப்பார்

பண்டித நேரு பேசுவார்

புதுடில்லி, அக் 15

அக்டோபர் 27-ம் தேதி இங்கு அகில ஆசிய நாடுகளின் தொழில் மகாநாடு ஆரம்பமாகிறது. 22 நாடுகள் இதில் கலந்துகொள்ளும். சர்வதேச தொழில் ஸ்தான சட்டப்படி தொழிலாளர் வாழ்க்கைத்தர உயர்வு தொழில் கொள்கை, தொழிலாளர் பாதுகாப்பு நலங்கள்பற்றிய பிரச்னைகள் ஆலோசிக்கப்படும். காந்திஜி மகாநாட்டை ஆரம்பித்து வைப்பார்; பண்டித நேரு பேசுவார். அதன் பிறகு நடவடிக்கைகள் ஆரம்பமாகும். (அ-பிரஸ்)

இந்திய நாணயச் செலாவணிக் கட்டுப்பாடு

வர்த்தக கமிஷனர் அறிக்கை

கொழும்பு, அக் 16

இலங்கை இந்திய நாணய செலாவணிக் கட்டுப்பாடு சம்பந்தமாக இங்குள்ள வர்த்தகர்களிடையே இருந்து வந்த கவ்டங்களபற்றி இலங்கையிலுள்ள இந்திய வர்ததக கமிஷனர் திரு ஆர் கே. தாண்டன் ஒரு அறிக்கை விடுத்துள்ளார். அந்த அறிக்கையில் நாணயச் செலாவணி கட்டுப்பாட்டுச் சட்டங்கள் சாதாரண காலத்தைப் போன்றேயிருப்பதாகவும் பணம் மாற்றுவதால் இரு இடங்களிலும் எவ்விதமும மாற்றமிலலை யென்றும் தெரிவித்துள்ளார். முன்னர் இந்திய ரூபாயை இலங்கை ரூபாயாக மற்றுவதில் நாணயமாற்று வர்ததகர்கள் அதிக கமிஷன் எடுத்தது நின்று எப்பொழுதும் போன்ற நிலை இப்பொழுது இருந்து வருகிறது.

பாரதி தாசன் நடிகர் கழகம்

12-10-47 ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 2-மணிக்கு டெ கழகத்தின் மாதாந்தப் பொதுக் கூட்டம் வெலன் பெசேஜ்ஜில் திரு. எஸ் எம். மைக்கேல் அவர்கள் தலைமையில் நடைபெற்றன. கழகத்தின் எதிர்கால வளாச்சியைக் குறித்து பலதீட்டங்கள் நிறைவேற்றப்பட்டன.

பாலஸ்தீன அரசியல் புயல்

அமெரிக்காவையும் ரஷியாவையும் அராபிய பத்திரிகைகள்கண்டிக்கின்றன

யூதர், அராபியர் முஸ்தீபுகள்

பெய்ரூத், அக். 15

பாலஸ்தீனத்தை பிரிட்டிஷார் வெளியேறிய பிறகு அதை அராபியர் கைப்பற்றுவதுபற்றி சென்ற ஒரு வார காலமாக டமஸ்கஸ், பெய்ரூத், அம்மன் ஆகிய மூன்று அராபிய நகரங்களிலும் 7 அராபிய நாடுகள் நடத்திவந்த மந்திராலோசனைகள் முடிவுற்று விட்டன. ஐக்கிய முன்னணி அராபிய ராணுவத்திற்கு பிரதமதளபதியை நியமிப்பதுபற்றி இனி முடிவு செய்யப்படும்.

லெபானனிலுள்ள அமெரிக்க ஸ்தானிகரிடம், அமெரிக்க பார்லிமெண்டின் வெளிநாட்டுக் கமிட்டியைச் சேர்ந்த இரு அங்கத்தினர்கள் ஈராக்கிற்கு விஜயம் செய்வதை அனுமதிக்க முடியாதென்றும் அமெரிக்கா யூதர்களுக்கு ஆதரவாக இருப்பதை ஈராக் வெறுக்கிறதென்றும் இங்கு வந்திருக்கும் ஈராக் பிரதிநிதி கோஷ்டி தெரிவித்தனர்

ரஷியாவும் பாலஸதீன பிரிவினையை ஆதரித்திருப்பது குறித்து அராபிய நாடுகளின் பத்திரிகைகள் கண்டித்து எழுதியிருக்கின்றன. அமெரிக்க முதலாளித்துவமும் ரஷிய பொதுவுடைமைத்துவமும் எல்லாம்சுய நலத்துவமாகத்தானிருக்கின்றனவென்றும் இனி கீழ் நாடுகள் மாஸகோவையோ அல்லது வாஷிங்டனையோ எதிர்பார்க்காமல் தன் காலிலேயே நின்று தன்னிச்சையான நடவடிக்கையே எடுத்துக்கொள்ள வேண்டுமென்று எழுதியிருக்கின்றன.

பாலஸதீனத்தில் சட்ட விரோதமாக வந்து குடியேறியிருக்கும் 25,000 யூதர்களும் பிரஜா உரிமையைப் பெற்றுக் கொள்ள மனுச் செய்யும்படி ஜெருசலேமிலுள்ள சுப்ரீம் கோர்ட் உத்தரவு பிறப்பித்திருக்கிறது.

சைப்ரஸ் தீவில் முகாம்களில் இருந்துவரும் யூத அகதிகளை உடனே பாலஸதீனத்தில் குடியேற்ற உத்தரவிடும்படி இன்று யூகோஸலவியா பிரதிநிதி ஐக்கிய தேச அசெம்பிளிக்கு தீர்மானம் கொண்டு வந்திருக்கிறார்.

இன்று சிரியா பிரதிநிதி தலைமையில் ஐக்கிய தேச பாலஸதீன கமிட்டி கூடியபோது, பாதுகாப்பு நிர்வாகக் கொள்கைப்படி பாலஸதீனத்திற்கு ஒன்று சுதந்திரம் வழங்குவதற்கும் அல்லது தர்மகர்த்தா நிர்வாகத்தை நடத்துவதற்குமே ஐக்கிய தேச ஸதாபனத்திற்கு உரிமையுண்டு என்று தெரிவித்தார். கமிட்டி வியாழக்கிழமை மீண்டும் கூடும்.

ஜப்பானியச் சக்கரவர்த்தி அப்பாவியா?

யுத்தக் குற்ற விசாரணைச் சபைமுன்னர் வாதம்

லண்டன், அக். 14

சர்வதேச ராணுவ யுத்தக் குற்ற விசாரணைச சபை முன்னர் ஆஜரான ஜப்பானிய சக்கரவர்த்தியின் ஆலோசகர் மார்க்குவிஸ கொயிச்சி, தாமும் ஜப்பானியச் சக்கரவர்த்தியும் ஒரு குற்றமும் அறியாத அப்பாவிகள் என வாதித்தார்.

பிரிட்டன், அமெரிக்கா ஆகியவற்றிற்கு எதிராக யுத்ததை நடத்த டோஜோ பிரதமராகத் தெரியப்பட்டாரல்லவா? மார்க்குவிஸ கொயிச்சியே அவ்வாலோசனைக்குப் பொறுப்பாளி என்று தெரிகிறது. (ராய்ட்டர்)

நாளை அரிசிக் கப்பல் வரும்

கொழும்பு, அக். 15

ரங்கூனில் இருந்து பண்டிட் என்னும் கப்பல் நாளை கொழும்புக்கு வரும் என எதிர்பார்க்கப்படுகிறது, அதில் 1775 டன் அரிசி வரும் என அறியப்படுகிறது.

கிரவுன் தியேட்டர் ஸ்கின்னர்ஸ் ரோட் மருதானை

தினசரி மாலை 6-15, இரவு 9-30 மணிக்கும் சனியும் ஞாயிறும் மெட்னி 3 மணிக்கும்.

சித்திரகலாவின் உன்னத தயாரிப்பு!

"தாய் நாடு" தமிழ்ப் படம்

வெற்றிகரமான 4-வது வாரம்!

அடக்குமுறைகளுக்கு ஆட்பட்டிருந்த மக்களின் மீட்சிக்காகவும் தாய்நாட்டின் விடுதலைக்காகவும் நடக்கும் போராட்டங்களைக் கொண்டது.

மெட்ருஸ் மெயில் புகழ் பாட்லிங்மணி

புதிய நடிகை சுந்தரி

மற்றும் பலரும் சிறப்புடன் நடித்தது.

பெண்களுக்கும் சிறுவர்களுக்கும் மெட்னியில் பால்கனிக்கு அரைச் சார்ஜ் எடுக்கப்படும்.

நவீன முறையில் தயார் செய்யப்பட்ட



சந்திரா பீடியை வாங்கி உபயோகியுங்கள்.

லொறி சாரதியின் கவலையீனம்

எதிரிக்கு இரண்டு வருட கடுங்காவல்

யாழ்ப்பாணம், அக். 14

யாழ்ப்பாணத்தில்1946-ம்ஆண்டு செப்டம்பர் மாதம் புன்னாலைக் கட்டுவன் பகுதியில் வி 1037 இலக்க லொறியை கவலையீனமாக ஓட்டிச் சென்றதாகவும், சின்னத்துரை துரையையா என்பவருக்கு மரணம் விளைத்ததாகவும், கே பி. இரத்தினஐயா என்பவருக்கு காயம் விளைத்ததாகவும் லொறியில் ஆகாயக் கப்பலை ஏற்றி அதற்கு இரு கரையிலும் சிவப்பு வெளிச்சம் ஏற்றாமல் வந்ததாகவும் வட இலங்கை பஸ கம்பெனி ஒன்றைச் சேர்ந்த டிரைவர் கதிரவேலு கந்தையா என்பவர் மீது தொடரப்பட்ட வழக்கு யாழ்ப்பாணம் ஜில்லாக் கோர்ட்டில் நீதிபதி திரு. ஆர். ஆர். செல்வத்துரை முன் விசாரணைக்கு எடுக்கப்பட்டது.

விசாரணை முடிவில் நீதிபதி எதிரிக்கு முதற் குற்றச்சாட்டுக்கு இரண்டு வருடச் சிறைத் தண்டனையும் இரண்டாவது குற்றத்துக்கு ஒரு வருடச் சிறைத் தண்டனையும் விதித்தார் எதிரி இரு தண்டனைகளையும் ஏககாலத்தில் அனுபவித்தல்வேண்டுமென்றும் தீர்ப்புச் செய்தார்.

நகர மண்டபத்தில் புது வருடத்தின கலவரம்

கொழும்பு நகர மண்டபத்தில் கடந்த ஜனுவரியில் புது வருடத் தினத்தன்று இரவு நடைபெற்ற நடனக் கச்சேரியின்போது நான்கு சிப்பந்திகளை சாளரத்தின் வழியாக வெளியே தூக்கி எறிந்து கொலைசெய்ய முயற்சித்ததாகவும் குழப்பம் செய்ததாகவும் சேதம் விளைத்ததாகவும் வெள்ளவத்தையைச் சேர்ந்த நால்வர் மீது குற்றம் சாட்டப்பட்ட வழக்கு தொடர்ந்து கொழும்பு அசைஸ் கோர்ட்டில் விசாரணைக்கு எடுக்கப்பட்டது. பிரஸ்தாப சம்பவம் நடைபெற்ற இடத்துக்குஅதிகாரிகள்விஜயம் செய்து பார்த்து மீண்டும் விசாரணை நடைபெறுகிறது.

நடுச் சமுத்திரத்தில் பெட்ரோல் தட்டுப்பாடு

கடலில் இறங்கிய ஆகாய விமானம்

லண்டன், அக். 14

"பேர்முடா ஆகாய ராணி" என்னும் அமெரிக்க விமானம் வட அட்லாண்டிக் சமுத்திரத்தில் ஒரு விபத்துக்குள்ளாகியதாக ஒரு செய்தி முன்னர் வந்தது அவ்விமானத்தில் 69 பிரயாணிகள் ஏறிச் சென்றதாகச் சொல்லப்பட்டது.

பின் வந்த செய்தியின் படி பிரஸதாப விமானம் நடுக்கடலில் எவ்விதபழுதுமின்றிஇறங்கியதாகவும் இரண்டு மைலுக்கு மிதந்து சென்று ஒரு கப்பலை அடைந்ததாகவும் தெரிகிறது. பிரயாணிகள் அக்கப்பலுக்கு மாற்றப்பட்டார்கள்.

பெட்ரோல் தட்டுப்பாடு ஏற்பட்டதன் காரணமாகவே இங்ஙனம் நடுக்கடலில் இறங்கும் நிர்ப்பந்தம் ஏற்பட்டது. [ராய்ட்டர்]

துருக்கி அரசாங்கத்தின் மீது நம்பிக்கைத் தீர்மானம்

தேசிய சபையில் நிறைவேற்றப்பட்டது

அங்காரா, அக். 14

செப்டம்பர் 10-ல் ஹஸன் சாகா தலைமையில் நிறுவப்பட்ட துருக்கி அரசாங்கததின் மீது நேற்று தேசிய சபையில் ஓர் நம்பிக்கைத் தீர்மானம் நிறைவேற்றப் பட்டது. ஆதரவாக 362 வோட்டுகளும் எதிர்த்து 49 வோட்டுகளும் கிடைத்தன. சென்ற அரசாங்கத்திலும் பார்க்க எதிர்க்கட்சியான ஜனநாயகக் கட்சி சம்பந்தமாக ஓர் மிதமான கொள்கையைப் புதிய அரசாங்கம் அனுஷ்டித்து வருகிறது.

சிலோன் நியூஸ் பேப்பர்ஸ் லிமிட் டெட்டிற்காக, 1947-ம்ஆண்டு அக்டோபர் மீ 16உ இந்த பத்திரிகை 194A. தட்டாரத் தெரு, கொழும்பு, சுதந்திரன் அச்சுக் கந்தோரில் அச்சிட்டு கொழும்பு, மெயின் ஸ்டிரீட்டில் இருக்கும் சிங்காரம் நடராசா அவர்களால் வெளியிடப்பெறுவது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org